


மகேந்திரன் கேதீஸ்வரன்

# கூத்து இயல்

**ம. கேதீஸ்வரன்**
**முனைக்காடு**

**வெளியீடு**
**நாகசக்தி கலை மன்றம்**
**முனைக்காடு.**

## நூற்தரவு


| | |
|---|---|
| தலைப்பு | : கூத்து இயல் (வடமோடி கூத்து) |
| ஆசிரியர் | : ம.கேதீஸ்வரன் (கலைமாணி) |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| பதிப்பகம் | : நாகசக்தி கலை மன்றம், முனைக்காடு |
| முதற்பதிப்பு | : 2017 |
| அச்சுப்பதிப்பு | : அக்ஷயன் அச்சகம், கொக்கட்டிச்சோலை. |
| அட்டைப்படம் | : திரு. ஆ. தனுஸ்கரன் |
| அளவு | : 1/8 |
| பக்கங்கள் | : 72 |
| பிரதிகள் | : 500 |
| விலை | : 200 /= |
| ISBN | : 978-955-3887-00-9 |

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. சமர்ப்பணம் | 03 |
| 02. ஆசியுரை | 04 |
| 03. வாழ்த்துச் செய்தி | 06 |
| 04. மதிப்புரை | 08 |
| 05. அணிந்துரை | 11 |
| 06. என்னுரை | 13 |
| 07. கூத்து | 17 |
| 08. நந்தியின் மகிமை | 18 |
| 09. மனிசி எங்கே? | 34 |
| 10. உழவர் பெருமை | 42 |
| 11. மதுவின் கொடுமை | 51 |
| 12. அண்ணாவியமார் வாண்மை விருத்தி | 64 |
| 13. ஆட்டமுறையும் தாளங்கட்டுதலும் | 69 |
| 14. கூத்தியலில் பயன்படுத்திய ஆங்கில மொழிச்சொற்கள் | 72 |

# சமர்ப்பணம்

இன்பமாய் எனை ஈன்று, இதமாக தான் வளர்த்து அன்பு நெறி காட்டிய தாய் தந்தைக்கும், அகரம் முதல் எண்களினை அத்தனையும் காட்டுவித்து. அறிவுக்கண் திறந்து வைத்த ஆசான்கள் அனைவருக்கும், கூத்தினின் கூத்தென்றும், மரபுரிமை இதுவென்றும் தன்னிகரில்லாத தமிழ்க்கலை எனக்காட்டி தங்கள் பணி செய்வித்து எங்களிடம் கையளித்த மூத்தகலைஞர்கள், முன்னோர்கள் அனைவருக்கும். அடியேனின் இந் நூலை, சமர்ப்பணம் செய்கின்றேன்.



# ஆசியுரை

"நாமாடும் கூத்து நலம் பெறவேண்டுமென" முனைக்காடு அருள்மிகு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பரசுராமன் மானாகப்போடி ஐயர் அவர்கள் உவந்தளித்த ஆசியுரை

அரனின்றாடும் அழகிய சிற்சபையில்
நிறையோடு தாளலய சுருதி நிந்தனையின்றியே
பரனிடம் கேட்டுமே பண்புடன் தெளிந்து கொண்டு
குறையின்றி வையகத்தோர்க்கு குறிப்பிடன் கூறிவைத்து
அரவு பிறை சடையோன் அணங்கதை தலையில் வைத்தே
வரையின்றி கூத்தாடி வானவர் மகிழவேதான்
மரபு நெறி தவறா மாண்புடன் மத்தளத்தை
கரையின்றி கானமியற்று கலை நந்தியை போற்றுவோமே.

கைலாயமலையில் வீற்றிருந்து கருணையுடன் உலகாளுகின்ற கற்பனைக் கெட்டாத கருணைவாருதி இந்த உலக நன்மைக்காக கலைகளை அளித்ததோடல்லாமல், கூத்துமாடி, கூத்தாடி என்கின்ற பட்டத்தையும் தனதாக்கி கொண்டார். இக் கூத்துக் கலையையும் மத்தளம் மீட்டுகின்ற தன்மையையும் முனிவர்கட்கு நந்திதேவர் அடித்தும் நடித்தும் காட்டினார் தாருகாவனத்தினிலே இது தாண்டவம் போன்றிருந்தது. இவ்விடயம் வாய் வழியாக மற்றவர்கட்கும் தெரியும் பொருட்டு பரவியது. இறையருள் பெற்றவர்களிடம் இக்கலை இயல்பாகவே சேர்ந்தது. அதை முன்னோர்கள் ஒன்று கூட்டி வடமோடி, தென்மோடி என இரு பிரிவாக வகுத்து பொழுது போக்காகவும் கலைவளர்க்கும் நோக்குடனும் ஆடிவந்தனர்.

இன்றைய நிலையில் இக் கூத்துக்கலை நாட்டுக் கூத்து எனமட்டம் தட்டி அறியாதவன் செய்கின்ற தொழிலாக மாறிவிட்டது. கிராமத்தில் உள்ளவர்களின் பாமரக் கலை என கற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டது.

இதனிடம் கலந்துள்ள இசையும் ஒலியும் அவர்கட்கு விளங்காததினால் அவர்களாலேயே அவர்கள் மூடராகிவிட்டனர். தற்போதைய நிலையில் இதை உலகுக்குணர்த்த வேண்டுமென்று ஊன்று கோலாக நிற்கின்ற கலை இலக்கிய வாதிகள், பல்கலைக்கழகத்தினர் இதன் மகிமையை உணர்ந்துள்ளனர். இந்நிலை உயர்ந்து, பரந்து பாரெங்கும் பரவவேண்டும் பண்புடன் தமிழ்மொழி வளரவேண்டும் கூத்துக்கலைஞர்கள் பாடலாசிரியர்கள் அண்ணாவிமார்கள், பிற்பாட்டுக்காரர், சபை நடத்துகின்றவர்கள் பெருமை பெறவேண்டும். என்கின்ற ஆதங்கத்தோடு இறைவனை பலவகையில் சரணாகதி என்று வணங்கி இக்கலைக்கும் கலைஞருக்கும் இறையருளோடு வல்லமையும் வழங்க வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

முனைக்காட்டினிலே முத்தமிழை வளர்க்கவென நாகசக்தி கலை மன்றம் தனது முழுவல்லமையை பிரயோகித்து வருகின்றது. கூத்து, வசந்தன், கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல் எல்லாவற்றிலும் தன்னிலையை உயர்த்தி வருகின்றது. இதனை மேன்மையுறச் செய்யவென துடித்திடும் இளைஞர்களில் "கவித்திறன் மிக்கோன்", "இசைவாரிதி", "தாளவித்தகன்" என்றெல்லாம் பாராட்டக் கூடிய கலைமாணி ம. கேதீஸ்வரன் அவர்களின் பணி அளப்பரியது. அவர் தற்போது இயற்றியுள்ள நந்தியின் மகிமை, மதுவின் கொடுமை, உழவர் பெருமை, மனிசி எங்கே? போன்ற கூத்துப் பாடல்களின் படைப்புகளில் இருக்கும் சொற்பிரயோகம் தீந்தமிழ் மெட்டுகள் ஆடவைக்கும் போன்று பாடுபடுத்துகின்றது. குறையற்ற எண்ணக்கருக்கள் கவிஞனின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றது.

இதேபோன்று அனேக படைப்புக்களை கூத்துக்கலைக்கான கவிஞர்கள் உருவாக்க வேண்டும் தமிழின் பெருமை வளரவேண்டும் கூத்துக்கலை மிளிரவேண்டும். குறைவின்றி கலைஞர்கள் வல்லமையுடன் வாழவேண்டும். நாகசக்தி கலை மன்றம் தனது முழுத்திறமையைக் காட்டி முன்னேறி வரவேண்டும் இவை எல்லாவற்றிற்கும் எம்பெருமான் நாகலிங்கேஸ்வரருடைய அருட் கடாச்சத்தோடு நாகசக்தியும் சேரவேண்டும் என்று வணங்கி வாழ்த்தி "அருளோடு பொருளும் பெறுவீர்" என்று அன்போடு ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

சுபமஸ்து.

இப்படிக்கு
**சிவஸ்ரீ ப. மானாகப்போடி ஐயர்.**



# வாழ்த்துச் செய்தி

சிவபெருமான் தில்லையில் ஆடியதே முதல் கூத்து சிவபெருமானே முதல் கூத்தன். நந்தியம் பெருமானே முதல் மத்தளகாரன் இது தெய்வக்கூத்து. இதனால் மணிவாசகரும் "தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" என்று பாடியுள்ளார். மனிதர்களை எடுத்துக்கொண்டால், கற்கால மனிதன் உணவுக்காக, வேட்டையாடும் போது நிலத்தில் விழும் மிருகங்களைக் கண்டதும் மகிழ்ச்சியினால் குதித்துப் பாய்ந்து ஆடியதே மனிதனின் முதல் கூத்து.

இப்படிப்பட்ட தொன்மைக் கலையான கூத்து இலங்கையில் பல மாவட்டங்களில் ஆடினாலும், ஆட்டத்தின் சிறப்புக் காரணமாக மட்டக்களப்பில் ஆடும் கூத்துக்கு ஒரு தனி மதிப்புண்டு "குத்திக் குதித்து ஆடுவதே கூத்து" எடுத்துக் காட்டாக,

"தாகத்தோ திந்தா தகதிக
தாதெய்யத் தோம் தகதிக தாதெய்"

போன்ற தாள ஓசைகளுக்கேற்ப ஆடுவதன் மூலம் கண்டு கொள்ளலாம்.

இப்படிப்பட்ட தொன்மைக் கலையான கூத்து, சினிமாப் படங்களின் வருகைக்குப் பின் தலித்துகளைப் போல ஒதுக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மாணவனான பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் பல்கலைக்கழகத்திலே அறிஞர்கள் மத்தியிலே மேடையேற்றிக் கௌரவப்படுத்தினார். இது மட்டுமல்லாமல் அரசாங்கமும், நாடகமும் அரங்கியலும் என்ற பாட நெறியை ஆரம்பித்ததுமல்லாமல் தமிழ்த்தினப் போட்டிகளில் இதை அறிமுகப்படுத்தியது. இதனால் கூத்து இன்று ஒரு பேசுகலையாக விளங்குகிறது.

இந்நிலையில், முனைக்காட்டினைச் சேர்ந்த ம.கேதீஸ்வரன் அவர்கள் பெருமுயற்சி எடுத்து, நந்தியின் மகிமை, மனிசி எங்கே, உழவர் பெருமை, மதுவின் கொடுமை என நாலு கூத்துகளை ஆக்கி அரங்கேற்றியது மட்டுமல்லாமல், நூலுருவிலும் வெளியிட முற்பட்டதைப் பாராட்டுகின்றேன். இவரைப் போன்று இன்னும் பல இளைஞர்கள் இதில் ஈடுபடுவதற்கு இவரது முயற்சி வழிகாட்டும் என நினைக்கின்றேன்.

இக்கூத்துகளில் விருத்தங்கள், தருக்களில் எதுகை மோனை அடிகளில், யாப்பு முறைகளில் சில வழுக்கள் காணப்படுகின்றன. இனிமேல் இப் பிழைகள் வராமல் கவனமெடுப்பது நல்லது. இப்படிப்பட்ட தவறுகள் இருந்தாலும் இவரது முயற்சியையும், துணிவையும் ஈடுபாட்டையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதைப்போல இன்னும் பல கூத்துகளை ஆக்கி மேடையேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் இதன் மூலம் நமது வருங்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

2017.12.20

**ஆரையம்பதி - “மூனாக்கானா”**
மு. கணபதிப்பிள்ளை
கந்தசாமி கோயிலடி,
ஆரையம்பதி.



# மதிப்புரை

எமது மட்டக்களப்பு பிரதேச மக்களின் மன மகிழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் துயர் மாற்று மருந்தாய் எம்மத்தியில் உயிர்ப்போடு இருக்கும் கூத்துக்கலையைப் போற்றவும், ஏற்றவும் வேண்டும். இளம் கலைஞர் விருதுபெற்ற அண்ணாவியார் மகேந்திரன் கேதீஸ்வரன் அவர்கள் ஆக்கிய நான்கு கூத்துக்கள் (வடமோடி) அடங்கிய நூல் பிரதிகண்டு பெருமகிழ்வடைவதோடு. அவரது ஆற்றலின் விரிவு, ஆக்கத்திறனின் அற்புதம் மெச்சத்தக்க உச்ச நிலையிலுள்ளது. கலைஞன் ஒருவனின் கிளர்ச்சியும், உணர்ச்சியும் அலை மோதும் போது அதியுயர் வடிவத்தை அவ்வாக்கம் பெறும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இவ்வாக்கங்கள் அமைந்துள்ளன.

நந்தியின் மகிமை; எனும் கூத்து இசை நிறைவும், இயல் நிலையும் ஒருங்கே ஓட, கூத்து மரபு தரும் செய்யுள் அமைப்பும், கூத்தினை பழைமையாகவே மரவு மாறாமல் பேணும் சிறப்பும், அதன் வெற்றிக்கான அர்பணிப்பான செயற்பாடும், பார்போர் மனத்தினில் நீங்காத இடத்தினைப் பெற்றிடும் என்பது திண்ணமாகும்.

"பட்டு வண்ணச் சேலைகட்டி பளிச்சிடும் பதக்கம் பூண்டு
நெடியதோர் கூந்தல் தன்னை நேராக வாந்து கட்டி
தம்பியாம் உலக நாதன் தனையே துணையாய்க் கொண்டு
உலகெலாம் ஆட்சிசெய்ய உலக நாச்சி வருகின்றாள்.'

என்ற விருத்தச் சொற்கட்டுக்கள் கவிஞனைப் பளிங்கு போல் பிரதிமைப் படுத்தி நிற்பதோடு, வாந்து கட்டி என்ற சொற்பதங்கள் கிராமத்து மண்வாசனையைக் காட்டி நிற்கின்றன.

"ஏகிச் செல்வோமே நாங்கலங்கே கூடிச்செல்வோமே
ஏகுவோம் இப்போதே எப்படி ஆனாலும்
கோயிலை உடைப்பதில் குறியது வைப்போமே.' என்ற பாடலும்,
"கொக்கட்டி மரத்தின் கீழ் உதித்திட்ட லிங்கம்
திக்கெட்டும் அருளாட்சி செய்கின்ற லிங்கம்

கொக்கட்டிச் சோலையில் உறைகின்ற லிங்கம்
தான்தோன்றி லிங்கமாய் அமர்ந்திட்டாய் போற்றி'

என்ற பாடலிலும், எதுகை மோனைகள் விரவிப் பிறழாது செல்லும் கவிக்கட்டு, தேன்சொட்டி மனதைத்தித்திக்கச் செய்கின்றது. துடிப்பான வகையில் பாத்திரப்படைப்பும், விறுவிறுப்பான கதையோட்டமும், பாடல்களின் அமைப்பும் அற்புதம்: அற்புதம்.

இக்கலைஞன் வடிவமைத்த "மனிசி எங்கே" என்ற வடமோடிக் கூத்துப் பிரதியானது, கூத்துக்கலையைப் பயில்வோர்க்கும், கூத்துப் பிரதிகளை எழுத எத்தணிக்கும் எழுத்தாளருக்கும் ஒரு சிறிய சம்பவத்தை எப்படி கூத்தாக்கம் செய்வதென்பதனை போதித்து நிற்பதனை நேரடியாகக் காண்பதோடு, வழிகாட்டியாய், உசாத்துணையாய் அமையு மென்பதில் ஐயமில்லை. கதைக்கருவின் போக்கில் மயக்கத்தை ஏற்படுத்திப் பின் விளக்கத்தை அளிக்கும் பாங்கு இவரின் ஆக்கத்திறனின் ஆளுமைக்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது.

"பட்டு வண்ண வேட்டி கட்டியே
நல்ல பயனுள்ள கதைகளைப் பேசிட
திட்டமாய் கட்டியன் சிறப்பாய் சபைநாடி
சட்டங்கள் போட்டுமே சமத்தாக வருகிறேன்' என்று 'உழவர் பெருமை; கூத்தில் கட்டியன் தருவில் புத்தாக்க ஆனால் முறைமாறாத பாடலாகவும், எதுகை, மோனைகளோடு கட்டுறுப்பான சொற்கோப்பு உள்ளத்தில் உவகையை ஏற்படுத்தும் வண்ணம் அமையப் பெற்றுள்ளது.

"ஒரு தாய் பிள்ளைகளாய் நாமலின்று
ஒரு மனதாகவே தான்
நாளைய காலங்கள் நமதே நமதென்று
ஓயாத உழைப்பினால் ஒரு தேசம் காணுவோம்'

எனும் கவிதையமைப்பு, ஒற்றுமையை வலியுறுத்துவதோடு 'ஒன்று பட்டால் உயர்வு உண்டு; என்பதனை மிகவும் எளிமையான சொற்சேர்க்கையால் கவிஞன் கூறுவது பசுமரத்தாணியாய் உள்ளத்தில் பதியவைக்கின்றது. காட்சிக்குக் காட்சி உணர்வூட்டும் தன்மை கவிஞனின் கருத்தாழத்தை எடுத்துக்காட்டுவதோடு, பாவமைதி பாராட்டுக்குரிய தாய் அமைந்து கூத்துக்கு உயிரூட்டமாக அமைந்து நிறைவைத் தருகின்றது.

'மதுவின் கொடுமை' என்னும் கூத்தினிலே, "முறையான திட்டமில்லை முற்போக்கு சிந்தை இல்லை முற்றாக நம்மையெல்லாம் மூடராக்கப் பாக்கிறாங்க, என்ற இருவரிகளினூடாக, கட்டியன் வாயிலாக சமகாலத்தில் திட்டமில்லாது கடனைப் பெற்றுக் கட்டமுடியாது, திசைமாறித்தத்தளித்து தமையழிக்கும் எத்தனையோ குடும்பங்களின் கதைக்கருவை வித்தியாசமான ஒரு கதையின்

மூலம் கவிஞன் விளக்கியுள்ளார். வடமோடிக் கூத்தின் வடிவமைப்பும் அமைதியும் வழுவாது குடி குடியைக் கெடுக்கும் கொடுமையுடைய தென்பதை தாய், தந்தை, மகன் பாத்திர வார்ப்புக்களினூடாக இக் கூத்தின் மூலம் காட்டும் கலைஞனின் கதையின் கருப்பொருள் கச்சிதமானது.

மொத்தத்தில் நந்தியின் மகிமை, மதுவின் கொடுமை எனும் கூத்துக்கள் ஒவ்வொன்றும் ஒன்றரை மணித்தியாலமும், மனிசி எங்கே?, உழவர் பெருமை தலா ஒரு மணித்தியாலமுமாக, ஐந்து மணித்தியால வடமோடிக் கூத்துக்களை இப்புத்தகம் உள்ளடக்கியதாக உள்ளது. ஆனால் இக்கவிஞனின் முதல் கூத்துப் பிரதியாக்கம் கல்விக்கனி; ஆகும். அத்தோடு யாகக் குழந்தை;, நாகலிங்கர் வரலாறு; எனும் வரலாற்று கூத்துப்பிரதிகளும் எழுதப்பட்டுள்ளது நோக்கற்பாலானது.

எமது மட்டக்களப்புத் தமிழகத்திலே அச்சுவாகனமேறி அச்சுருப்பெற்ற கூத்து நூல்கள் 1962ம் ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களால் முதன் முதலாக "அலங்காரரூபன் நாடகம்" தென்மோடிக் கூத்தும், 1969ஆம் ஆண்டு வித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்களாலேயே "இராமர் நாடகம்", எனும் வடமோடிக் கூத்து நூல் முதன் முதலாகவும், "அனுருத்திர நாடகம்" தென்மோடிக் கூத்தும், 2013ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் இளைப்பாறிய அதிபர் த.க.கனகநாயகம் அவர்களால் "இளவரசி உலகநாச்சி" வடமோடி கூத்தும், 2015ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடி கல்வி அபிவிருத்திச்சபை நடாத்திய கூத்துப் பெருவிழாவின் போது, "அபிமன்னன் வதம்", "நல்ல தங்காள் சரித்திரம்", "கடோக்கஜன் போர்", "கர்ணன்வதை", "திருமுருகன் திருக்கல்யாணம்", "சுபத்திரை கல்யாணம்" ஒவ்வொரு மணித்தியால ஆறுவடமோடிக் கூத்துக்கள் மூலப்பிரதிகளின் உட்பிரிவுகளாக நூலுருப்பெற்றன. அடுத்து நூலுருப்பெறும் புத்தகமே கலைஞன் கேதீசின் கூத்தியல் எனும் வடமோடி கூத்து நூலாகும்.

காலத்தின் தேவையாக இக் கூத்தாக்க கலைஞனின் பணி போற்றப்பட வேண்டும். வரலாறுப் பதிவுகள் மக்கள் மனதில் பிறழ்வின்றி நிலைத்து நிற்க, இந்த ஆக்கம் துணை நிற்கும் என நினைக்கின்றேன். எங்கள், படைக்கும் பிரமாவான கவிஞன் மகேந்திரன் கேதீஸ்வரன் மனப் பூர்வமாக வாழ்த்தப்பட வேண்டியவரே. இவரது கூத்தாக்கப் பணிமென்மேலும் வளரவும், கலைத்துறையில் அரியசாதனைகள் புரியவும் வாழ்த்துவதோடு, இவருக்கு இறையருள் நிறைவாகக் கிடைக்க எல்லாம் வல்ல தான்தோன்றீஸ்வரரைப் பிராத்திக்கின்றேன்.

அண்ணாவியார்.
**ஆரையூர் அருள்.**



# அணிந்துரை

"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்றார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள். அந்தக்குணத்தின் அடிப்படையில் தனித்துவ மாகக்கண்டு பிடித்த சாதனங்களில் ஓர் அரும்பெரும் தொடர்பு சாதனந்தான் அவன் பேசும் தமிழ் மொழியானது.

இந்தத்தமிழ் மொழியைக்கண்டு பிடித்து அதனை இயல், இசை, நாடகம் எனப்பகுத்தும் வகுத்தும் கடைப்பிடித்தும் வரலானான். இவ்வாறு கடைப்பிடித்து வந்ததில் எமது மருதநிலமான வயலும் வயல்சார்ந்த பிரதேசத்தில் உள்ள பாமர விவசாயி தொழிலாளர்களினது உழைப்பின் அலுப்பைப் போக்கவும், அவர்களை மகிழ்விக்கவுமென இங்குள்ளவர்களில் சிலரிடையே இயல்பாக உள்ள இசை ஞானத்தாலும், கலை ஆர்வத்தாலும் இதிகாசம், புராண இலக்கியங்கள் வாய் மொழியாய் இருந்த கதாபாத்திரங்களை எழுத்தறிவே இல்லாத புலவர்கள்; இராமநாடகம், அல்லிநாடகம், கிருஷ்ணன் தூது, குருக்கேத்திரன் போர், பஞ்சபாண்டவர் வனவாசம் என எண்ணற்ற பெயர்களில் வடமோடி, தென்மோடி, வசந்தன் எனப்பாடி ஆடி தொழிலாளி விவசாயிகளை மகிழ்வித்தும் மனித இனத்தினை நாடகம் கூத்தினூடாக நீதி நேர்மையாக வாழ அறிவூட்டியும் வரலாயினர்.

இதனடிப்படையில் முனைக்காட்டினைச் சேர்ந்த இளைஞன் செல்வன் மகேந்திரன் கேதீஸ்வரன் என்பவரும் தனது இசைஞானம், கவித்திறனைக் கொண்டு, இன்றைய மக்கள் சமுதாயத்தினரிடையேயுள்ள மதுப்பழக்கம், அறியாமை, சிக்கனமின்மை, பண்பின்மை ஆகிய தீய பழக்க வழக்கங்களைத் தன்னால் இயன்ற படி கூத்தினூடாக அறிவூட்ட எடுத்த முயற்சி என்பது பாராட்டுக் குரியதே ஆம்! ஒரு கல்லில் இரு மாங்காய் வீழ்த்தும் செயலாகக் கூத்திலும் சமூகச் சீர்கேடு, வரலாறு என்பனவற்றைப் பாடியதோடு, அதனை நூல் வடிவில்க்

கொண்டு வருவதும் மற்றுமோர் பாராட்டக் கூடிய விடயமாகும்.

கடுகு சிறிதாயினும் காரம் பெரிதென்பது போல் இவருடைய கூத்தியல் நூலில் இவரது கவித்துவத்தில் முகிழ்ந்த

"உலகினை உருளச் செய்யும்
உழவர்தம் உயர்ப் வைப்பாட
உற்றதோர் கட்டியன் நான்
உரிமை கொண்டுங்கள் முன்னே."

உழவர் பெருமை எனும் தலைப்பில் வரும் கூத்திலுள்ள அடிகளை: பெருமான் திருவள்ளுவரின் திருக்குறளிலே "உழவு" எனும் அதிகாரத்தில் வரும்:

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்பதை ஞாபகப்படுத் துவதோடு: இவருடைய கவித்திறனும் சந்தநயத்தோடு "மோனையெனும்" தொடை இலக்கணத் தினைப் புலமையினூடே வெளிப்படுத்தியுள்ளதைக் காணக் கூடியதாகவே உள்ளது! மேலும்

"முறையான திட்டமில்லை
முற்போக்கு சிந்தையில்லை
முற்றாக நம்மையெல்லாம்
மூடராக்கப் பாக்கிறார்கள்" மதுவின் கொடுமை.

இவ்வாறு இளைஞர் செல்வன் கேதீஸ் அவர்களின் சுய சிந்தனையும், புலமையும் உண்மையிலே எண்ண எண்ண வியக்கவே செய்கின்றது. செல்வன் ம.கேதீஸ் அவர்களின் கன்னி முயற்சியாயினும் இவை காலத்திற்குக் கட்டாயக் கடமையாகக் கூடியதே ஆனால் இத்தோடு நின்று விடாமல் மேலும் வடமோடி என்றில்லாமல். எமது பாரம்பரியமான தென்மோடியிலும்: பல கூத்துக்களை எழுதியும் நூலுரு வாக்க முன்வரவேண்டு மெனக்கேட்டு செல்வன் ம.கேதீஸ் அவர்களை உளமாரப் பாராட்டுகிறேன்.

நன்றி

என்றும் பணிவுள்ள
**ஆ. மு. சி. வேலழகன்**
10.12.2017



# என்னுரை

## "கலை ஒன்றே கவலை தீர்க்கும் நல் மருந்து"

"ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் ஏக உணர்விக்கும் என் அம்மை" கலைகள் அறுபத்தி நான்கு என்கிறது இந்துப்பண்பாடு. அது தமிழர் பண்பாடு. தமிழ்காட்டிய கலைவடிவில் ஆடற்கலை, பாடல்கலை, ஓவியக்கலை, சிற்பக் கலை, இசைக்கலை, கட்டடக்கலை என்று பல்கிப்பெருகிக் கிடக்கின்றன. இதில் ஆடற்கலையான நடனக்கலைக்குள்ளும் பல முறைமைகள், பிரிவுகள் அமையப் பெறுகின்றன. நடனக்கலையின் ஓர் அம்சம் கூத்து, இதற்குள்ளும் பல வடிவம் ஈழத்தைப் பொறுத்தமட்டில் வடக்கில்-வடபாங்கு, தென்பாங்கு, கிழக்கில் - வடமோடி, தென்மோடி, வசந்தன் கூத்து, கரகம், கும்மி, காவடி நடனம், கோலாட்டம். எனபரந்து விரிந்து எம்மிடையே இருக்கின்றன. கிழக்கு மாகாணம் எனும் போது குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில். வடமோடி, தென்மோடி கூத்துக்கள் மரபுகள் வழியாகவும் கூத்துக்கலை ஆர்வலர்கள் ஊடாகவும் செழிப்புற்று விளங்குகிறது என்பது நிதர்சனம்.

எம்மவர் முன்னோரின் கவித்துவமும், கலைத்துவமும், கண்டு களிப்புற்றேன். என்தந்தை ஓர் கூத்துக்கலைஞர், அக்கலையின் ஆர்வலர் அவர் கூத்தர்களை ஒன்று கூட்டி, எங்களது வீட்டின் முற்றத்தில் இருந்த வேம்பு மரத்தின் கீழ் கூத்து ஆடுவார்கள் அப்போது எனக்கு 10 வயது இருக்கும். அக்கூத்துக்கள் ஆடப்படும் போது களரியின் முன் இருந்து பார்ப்பேன். கூத்துமுடிந்ததும் எங்களது வீட்டிலே மத்தளத்தினை அண்ணாவியார் வைத்து விட்டுச் செல்வார். அதை எடுத்து அடித்துப்பார்ப்பேன், செவிமெடுத்த பாடல்களைப் படிப்பேன்.

இவ்வாறு, ஊரில் எமது தமிழ் கலையம்சங்கள் அதாவது கூத்து, கரகம், வசந்தன் என்பன ஆடப்படும் இடங்கள் எல்லாவற்றுக்குமாக சென்று பார்த்து ரசித்து ஆடல், பாடல், நடிப்பு ஆகிய அம்சங்களை நானும் சுபீகரித்துக் கொண்டேன்.

2003ம் ஆண்டு எமது மூத்த கலைஞர்களான திரு.க.நாகராசு, திரு. மகாலிங்கம் ஆகிய இருவராலும் கும்பகர்ணன் வதை எனும் வடமோடி மேடை கூத்து பழக்கப்பட்டது. இதில் இராமர் பாத்திரமேற்று எனது இளைய அண்ணர் திரு.ம.தில்லைநாதன் பழகி வந்தார். ஸ்ரீ நாகலிங்கேஸ்வர் ஆலயத்தில். உற்சவத்தின் போது மறுநாள் கூத்து அரங்கேற்றம் எனும் நிலையில் அண்ணா வுக்கு சுகவீனம் காரணமாக அரங்கேற முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது தம்பி நீதான் கூத்தை ஆடவேண்டும் என அண்ணா கூறினார். அத்தோடு எனது குடும்பத்தாரும் கூத்துப்பழக்கியவர்களும் கூறினர். அதை ஏற்று இராமருக்குரிய முதல் விருத்தம், முதல்பாட்டு ஆகியவற்றை மனனம் செய்து கொண்டு மறுநாள் இரவு அரங்கேறினேன். இதுதான் எனது கூத்துப் பிரவேசம்.

இதன் பின்னர் பல மேடை கூத்துக்கள், பாடசாலை தமிழ்த்தினப் போட்டிக்கான கூத்துக்கள் போன்றவற்றில் ஆடி அரங்கேறி தற்போது நாகசக்தி கலை மன்றத்துடன் இணைந்து எமது பாரம்பரியமான முறையில் கூத்தினை அரங்கேற்றம் செய்யவேண்டும் எனும் உத்வேகத்துடன் கன்னங்குடாவில் பிறந்து கொக்கட்டிச்சோலையில் வசித்து வரும் திரு.பா.கதிர்காமநாதன் அண்ணாவியார் அவர்களை நாகசக்தி கலை மன்றத்தின் தலைவர் திரு.இ.குகநாதன் அவர்களும் நானுமாக சென்று அவரை சந்தித்து களரிக்கூத்து ஆடவேண்டும் அதற்கு நீங்கள் தான் அண்ணாவியாராக கலந்து கொள்ள வேண்டும். கூத்தினை பழக்க வேண்டும் என பணித்தோம். அதற்கு அவர் 2013ம் ஆண்டு அலங்கார ரூபன் தென்மோடி கூத்தினை ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய உற்சவத்தின் போது அரங்கேற்றம் செய்தோம். அன்றுமுதல் மேடைக் கூத்துக்கு தடைவிதித்து கூத்து இனி களரியிலேயே அரங்கேற்றம் செய்யவேண்டும். என்றும் முடிவினையும் எட்டினோம். பின்னர் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கூத்து பழகி அரங்கேற்றம் செய்து வருகின்றோம்.

2014ம் ஆண்டு பவளக்கொடி கூத்து அரங்கேற்றத்தினைத் தொடர்ந்து எமது பிரதேசத்தில் மௌனித்து இருந்த கூத்துக்கலை மீண்டும் அனைத்து ஊர்களிலும் மிளிரத் தொடங்கி பல ஊர்களிலும் கூத்துக்கள் அதிகளவில் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்பது நாகசக்தி கலை மன்றத்துக்கு கிடைத்த வெற்றியாகும் இது மாற்றத்தின் பெருமிதமாகும்.

"ஊருராய் கூத்தாடும் ஊரம்மா எங்கள் ஊரினிலே கலைச்செல்வம் நூறம்மா" என்பதற்கமைவாக ஒவ்வொரு ஊரிலும் கூத்துக்கள் வருடத்துக்கு ஒன்றேனும். அரங்கேற்றம் செய்யப்பட்ட வேண்டும் தமிழர் மரபுரிமைகள்

பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ்ப்பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்கள் என்பனவற்றை பாதுகாப்பதுவும் எதிர்கால சந்ததிக்கு அவை அனைத்தையும் கொண்டு சேர்ப்பதும் எமது அனைவருடைய தலையாய கடமையாகின்றது.

எனது கடமையின் ஒரு துளியாக எமது முன்னோர்கள் கையளித்த பல கூத்துப்பிரதிகளை பின்பற்றியவனாக அவற்றின் மெட்டுகள் வழுவாது, முறைமை பிழையாத வகையில் சில முக்கிய காரணத்தினடிப்படையில், தகுந்த சந்தர்ப்பத்தில் சில கூத்துக்களை எழுதமுற்பட்டேன் அதற்கான காரணங்களை ஒவ்வொரு கூத்தின் முன் பக்கத்திலும் கூறிவைத்துள்ளேன். எனவே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமக்கு தேவையான அனைத்து அபிலாசைகளையும் ஒரு மனதோடு வென்றெடுக்க ஒற்றுமையையுடன் செயலாற்ற உங்கள் தாள்பற்றி நிற்கின்றேன்.

என்னை கலை உலகில் மிளிரச் செய்த நாகசக்தி கலை மன்றத்திற்கும், கூத்தினை எழுதுவதற்கு ஊக்கமூட்டிய அனைவருக்கும், கூத்தினை புத்தக வடிவாக்குவதற்கு உரமூட்டிய நண்பர் திரு.வ.துசாந்தன் மற்றும் ஓய்வு நிலை அதிபர் ஆரையூர் அருள் ஐயா அவர்கட்கும். நூலுருப்பெறும் கூத்தியல் நூலுக்கு ஆசியுரை வேண்டிய போது எத்தனையோ வேலைப்பழுவின் மத்தியிலும் புன்னகை பூத்து தன் ஆழ்மனதைத்தொட்டு ஆசியுரை வழங்கி என்னை ஆசிர்வதித்த ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.மாணாக்கப்போடி ஐயா அவர்கட்கும், கூத்தியலுக்கான மதிப்புரை ஒன்றினை வேண்டியபோது நல்லது மகன் கூத்துப்பிரதியினைத் தாருங்கள் எனபெற்றுக் கொண்டு என்னை ஊக்கப் படுத்தி உற்சாகமூட்டி மதிப்புரை வழங்கி என்னை வாழ்த்திய என்றும் மதிப்புக்குரிய ஓய்வு நிலை அதிபர் செம்மொழிப்புலவர் பல விருதுகளின் சொந்தக்காரர் 'ஆரையூர் அருள்' ஐயா அவருக்கும்.

கூத்தியலுக்கான ISBN இலக்கம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் எடுப்பதற்கு பழுகாமத்தில் வசிக்கும் திரு.ஆ.மு.சி.வேலழகன் ஐயா அவர்களின் இல்லத்துக்கு சென்றபோது அவருடைய நூல் உருவாக்க ஆக்கப்படைப்பு கண்டு வியந்தவனாய் அவருடைய வாழ்த்தினையும் பெறவேண்டும் எனும் எண்ணத்துடன் அணிந்துரை தாருங்கள் ஐயா என கேட்டபோது மறுப்பின்றி தனது மனமார்ந்த அணிந்துரையினை வழங்கிய கவிஞர், நாவலாசிரியர் பல விருதுகளின் சொந்தக்காரர் திரு.ஆ.மு.சி. வேலழகன் ஐயா அவர்கட்டும், ஆரையம்பதியில் வசிக்கும் மூத்தகவிஞர், கூத்து ஆர்வலர் "மூனாகானா" ஐயா அவரிடமும் கட்டாயம் வாழ்த்து உரை எடுக்கவேண்டும் தம்பி என்று எனக்கு அறிவுரை

வழங்கி என்னை அவரிடம் அனுப்பிவைத்த திரு.வேலழகன் ஐயா அவர்களின் சொற்படி திரு.மு.கணபதிப்பிள்ளை ஐயா அவரிடம் சென்று வாழ்த்துரை கேட்ட போது. நல்லது இளைஞர்கள் இவ்வாறான பணியில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது. நான் எழுதி முடித்துவிட்டு தொடர்பு கொள்ளுவேன் என்று என்னை வாழ்த்தி வாழ்த்துரை வழங்கிய "மூனாகானா" என்று சிறப்பாக அழைக்கப்படும். திரு.மு.கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கும்.

கூத்தியல் நூலினை நாகசக்தி கலை மன்றமே வெளியீடு செய்து தரவேண்டும் எனக் கூறியதற்கமைய அதனை ஏற்று வெளியீடு செய்துதரும் நாகசக்தி கலை மன்றத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை பதிவு செய்தவனாக, அடியேனின் சிறு முயற்சிக்கு ஆசிவேண்டி உங்கள் முன் கரம்கூப்பி நிற்கின்றேன். அத்தோடு புத்தகத்துக்கு அழகான அட்டைப் படத்தினை வரைந் தளித்த சோலையூரான் என்று சிறப்பாக அழைக்கப்படும் கவிஞர், ஓவியக்கலை ருமான திரு. ஆ. தனுஸ்கரன் அண்ணா அவர்களுக்கும், புத்தகத்தினை கணனி வடிவமைப்படுத்தி சிறப்பான முறையில் உருவாக்கி கையளித்த அக்ஷயன் அச்சகத்தினருக்கும் நன்றிகூறி மேலும் பல வழிகளில் எனை ஊக்குவிப்பீர்கள், ஆவன செய்வீர்கள் என்ற அசையாத நம்பிக்கையோடு விடை பெறும்.

என்றும் பணிவுள்ள,
**ம. கேதீஸ்வரன்,**
முனைக்காடு.

# கூத்து

- கூத்து இறை ஆன்மத் தொடர்வின் உறவுப்பாலம்
- கூத்து தமிழ் இலக்கண, இலக்கிய காப்பேடு
- கூத்து பாரம்பரியத்தின் புகலிடம்
- கூத்து முத்தமிழ் வித்தகம்
- கூத்து தமிழர் கலைகாக்கும் காவலரண்
- கூத்து கிராமிய பல்கலைக்கழகம்
- கூத்து வரலாற்றின் குறிகாட்டி
- கூத்து புலவனின் புத்தகம்
- கூத்து ஊருக்குப் பெருமிதம்
- கூத்து தனிநபர் அடையாளம்
- கூத்து ஈழத்தின் தனித்து;வம்
- கூத்து அறிவியல் தொழிநுட்பம்
- கூத்து இறை தந்த பெரும் கொடை
- கூத்து ஒற்றுமையின் தத்துவம்
- கூத்து திறமைக்கு ஒரு களம்
- கூத்து அறிவிக்கு ஓர் பாடம்
- கூத்து மரபு வழி ஊடகம்
- கூத்து புதுமைக்கும் வழிகாட்டி
- கூத்து முகாமைத்துவ அடித்தளம்





## நந்தியின் மகிமை

2012-2013ம் ஆண்டு கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகத் திணைக்களத்தினூடாக கூத்து விழாவில் வடமோடி கூத்துப் போட்டிக்கான விண்ணப்பப்படிவம், நியதி என்பன நாகசக்தி கலைமன்றத்திற்குக் கிடைக்கப் பெற்றது. இதன் நிபந்தனை என்னவெனில் கூத்தின் கருப்பொருள் கிழக்கு மாகாணத்தை பிரதிபலிக்கக்கூடிய வரலாற்றுக் கதைகளை உள்ளடக்கியதாக அமையவேண்டும், வேறு எந்த கருப்பொருளும் கூத்துப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது என அமைந்திருந்தது.

அதற்கமைய கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை பிரதிபலிக்கும்

வரலாற்றினை கூத்தாக எழுதி ஆடுவோம் என முடிவெடுத்து, நண்பர் வ.வினோதனும் நானுமாக மட்டக்களப்பு பொதுநூலகம் சென்று, மட்டக்களப்பு மான்மியம், கிழக்கிலங்கை பூர்வீக சரித்திரம் எனும் புத்தகங்களில் உள்ள உலகநாச்சியாரின் சரித்திர விடயங்களை நிழற்பிரதி எடுத்து இரண்டு கிழமைக்குள் கூத்தினை எழுதி முடித்தேன். கூத்தினைப்பழக்கி கன்னங்குடா ஸ்ரீகண்ணகியம்மன் ஆலய முன்றலில் கூத்து போட்டி நிகழ்த்தப்பட்டது. இதில் எமது கலைஞர்கள் சிறப்பான முறையில் தமது திறமைகளை வெளிக்காட்டினர், அனைவரும் இளங்கலைஞர்கள் எனும் அடிப்படையிலும் எங்களது கூத்தும், கன்னங்குடா மூத்தகலைஞர்கள் ஆற்றுகை செய்த கூத்தும் 1ம் இடத்தினையும் ஏனைய கூத்துக்கள் அடுத்தடுத்த இடங்களையும் பெற்றது இது நடுவர்களின் தீர்ப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து எமது பிரதேச (ம.தெ.மே) கலாசார விழாவுக்கான கூத்துப்போட்டி அறிவிப்பும்: அதன் நியதியும் அவ்வாறே அமையப்பெற்றது. அப்போட்டியிலும் நாகசக்தி கலைமன்றம் கூத்துப் போட்டியில் ஈடுபடுத்தி முதலாமிடத்தைப் பெற்றது இதனடிப்படையில் எமது கலை மீது இருந்த பற்றும் கூத்து எழுதும் ஆர்வமும், அதிகமானது என்று கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

**கூத்தில் ஆற்றுகை செய்த கலைஞர்கள்**

| | |
|---|---|
| கட்டியன் | - இர. கிரிசாந் |
| உலகநாச்சி | - ப. ரசிகரன் (சதீஸ்), கி. பாஸ்கரன் |
| உலகநாதன் | - ச. சபேஸ்கரன், கி. பாஸ்கரன், மு. நமசிவாயம் |
| வேடர்கள் | - செ. சுந்தரலிங்கம், வ. வினோதன் |
| பட்டர்கள் | - நா. ஜெகதீஸ், தி. சிவகுமார், நா. முகில்வண்ணன் |
| பறங்கியர் | - சி. சிவகாந்தன், நா. பாஸ்கரன் |
| ஐயர் | - ச. லிங்கேஸ்வரன் |

# நந்தியின் மகிமை (வடமோடி கூத்து)

## காப்பு விருத்தம்

மூசிகவாகனா முருகற்கு மூத்தவா முன்முதலான தேவா
முக்கண்ணர் மைந்தனே மூலப்பொருளோனே உன்பதம் முன்பணிந்தே
இயற்கையின் எழில் கொஞ்சும் இலங்காபுரித்தீவின் எழுவான்கரைதனிலே
ஆதவன் அருளிடும், அழகுறு ஆழியாம் வங்கக் கிழக்கு தனிலே
மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரெனும் மட்டக்களப்பு தனிலே
மண்முனை வாவியும் அதற்கப்பால் உள்ளதோர் கொக்கட்டிச்சோலை தனிலே
தான்தோன்றீச்சரத் திருத்தலம் உருவாக்கி புகழ்பெற்ற கதையைப்பாட
தன்னிகரில்லாத கரிமுகக் கடவுளே உன்னடி காப்புத்தானே.

## நாடகக்காப்பு

தேனது எடுக்க வேடத்திகடனும் மரத்தை வெட்டி
கொக்கட்டி மரத்தில் குருதி வடிந்துமே வந்தகதை
ராணியாம் உலகநாச்சி தன்பணி செய்த கதை
பின்வந்த மன்னரெல்லாம் பெரும்பணி செய்த கதை

பறங்கியத் தளபதியும் பரிபாலத்துடனே இங்கே
பரியேறி வந்து கோயில் உடைக்கவே முயன்ற கதை
கல்லான நந்திபுல்லை உண்டுமே காட்சி தந்த
கதையினைப் பாடி ஆட கங்கை தரித்தவா அருளுவாயே.

## கட்டியனர் வரவு (விருத்தம்)

தலையிலே முண்டாசிக் கட்டுமிட்டு இடுப்பிலே பட்டுவேட்டி இறுக்கிக் கட்டி
காலிலே சலங்கையது விரித்துக்கட்டி கையிலே பிரம்புமது பிடித்துக்கொண்டு
சபையிலே இறங்கி பல சப்பம் போட்டு சமத்தான கட்டளை இட்டுமேதான்
சுறுக்கான நடை நடந்து சுந்தரக் கட்டியகாரன் சபை நாடி வருகின்றானே.

தாளக்கட்டு – (தத்தித்தாம் தருகிட தித்திதெய்யா தெய்யா...)

**தரு**

*01.* *கட்டியக்காரனும் வந்தானே ஒய்யாரமான*
*கட்டியக்காரனும் வந்தானே*

கட்டியக்காரனும் வந்தான் கைதனில் பிரம்பும் கொண்டு
மட்டிலாப் புகழ் படைத்தமாது தன் புகழைப் பாட.

02. உலகமெல்லாம் புகழும் உலகநாச்சி தன்னுடனே
உலக நாதன் என்னும் சகோதரன் தானுமேதான்

03. தக்கதோர் சபையை நாடி தம்பியும் தானுமாக
மிக்கதோர் அரசு செய்ய மிகு சபை வாரார் காண்

**மறுதரு :**

01. மகராணி வருகின்ற வீதியே அலங்காரம் செய்கின்ற சேதியே
அறுகுடன் பசும்புல்லை வெட்டுங்கோ குப்பை
அப்புறத்தேத் தள்ளிக் கொட்டுங்கோ.

02. வாழை கரும்புகள் நாட்டுங்கோ நல்ல வளமான பந்தலைப் போடுங்கோ
பூரண பொற்குடம் வையிங்கோ நல்ல புதுமண
மலர்களைத் தூவுங்கோ.

**வசனம் :** கேளுங்கோ சபையோர்களே ஒரிசா தேசத்து அரசன் குகசேனனுடைய மகள் உலகநாச்சியாரும், மகன் உலக நாதனும் சபை மீது வருகிறார்கள் நான் தெருவீதி போகிறேன். சமூகம் எச்சரிக்கை, வெகுபராக்கு ஒருத்தரும் பேசக்கூடாது, பேசினால்? குற்றதண்டனை.

## உலக நாச்சி, உலகநாதன் வரவு

**உலகநாச்சி விருத்தம் :**

பட்டுவண்ணச் சேலைகட்டி பளிச்சிடும் பதக்கம் பூண்டு
நெடியதோர் கூந்தல் தன்னை நேராக வாந்து கட்டி
தம்பியாம் உலகநாதன் தன்னையே துணையாய்க் கொண்டு
உலகெலாம் ஆட்சி செய்ய உலக நாச்சி வருகின்றாளே

தாளக்கட்டு : தகதிகதா தையா தைய தக்க்ச்சும் தருகிட........)

**தரு : உலகநாச்சி**

நாச்சி நல்லாள் தானும் வந்தாளே
உலக நாச்சி நல்லாள் தானும் வந்தாளே
நாச்சி நல்லாள் தானும் வந்தாள் ஆட்சியது
செய்யவென்று
ஈசா சிவனே என்று இறைபதம் பற்றியேதான்.

தந்தையாரின் தாழ்பணிந்துமே நாமும்
இலங்காபுரிதனில் வந்தோமே
தம்பியாம் உலகநாதன் உன்னத உதவியுடன்
மண்முனை ராச்சியத்தை பரிசாகப் பெற்றுமேதான்.

பெற்றதோர் இராச்சியத்தை நாமும்
பேர்பெறவே ஆட்சிசெய்யவே
உற்றதோர் தம்பியரே ராச்சியத்தை பாதுகாத்து
உயர்வுடன் ஆட்சி செய்ய வழி ஒன்று கூறும் தம்பி.

**வசனம் :** கேளும் தம்பியாரே, வங்கக்கடல் தாண்டி இலங்காபுரி வந்தடைந்து. மேகவர்ணணிடம் புத்த சயனத்தைக் கொடுத்தற்குப் பரிசாக குணசிங்கன் குலம் மட்டக்களப்பு பெருநிலத்தின் மண்முனை இராச்சியத்தை பெற்றோம். காடுவெட்டி களணியாக்கி சீர்படுத்தி பாதுகாப்பதற்கு வழி ஒன்று கூறும் தம்பியேரே.

### உலகநாதன் தரு

01. என்ன வழி என்று என்னிடம் கேட்டீரே சோதரியே
நம்மிடதேசத்து ஊழியர் தம்மையும் தமக்கையாரே.
02. அன்னவர் தங்களை இங்குநாம் அழைத்துமே அரசியாரே
இப்பணிதன்னையும் அப்பணியார்க்கு நாம் சோதரியே
03. காடுகள் வெட்டியே களணிகள் காணவே சோதரியே
அவர்கள் தம் உதவியை நாடி நடத்துவோம் அறிகுவீரே.

**வசனம் :** கேளுங்கள் அரசியாகிய எனது தமக்கையாரே. நமது ஒரிசா தேசமிருந்து, குகக்குடும்பங்களை வரவழைத்து இக்காடுகளை வெட்டி சீர்படுத்தி செங்கோல் செலுத்துவோம் தமக்கையாரே.

## வேடுவர்கள் வரவு (விருத்தம்)

வனங்களே தஞ்சமென்று வாழ்கின்ற வேடர் நாங்கள்
வாழ்கின்ற விலங்குகளை வதைத்துமே உணவாய் உண்ணும்
காட்டிலே காய் கனிகள் தேனுடன் கிழங்கு வகை
உண்டுமே வாழ்கின்ற உன்னத குலமே நாங்கள்.

தாளக்கட்டு : தத்திமித்திமி தோம் தருகிட தழுக்கு சுந்தரி தெய்....

### தரு

வேடன் 1:திகடன் வந்தானே வேடுவத் திகடன் வந்தானே
கையிலே வில்லும் கத்தியும் கொண்டுமே
தீட்டிய கோடாரி கொண்டு திகடனும் தோன்றினானே.

வேடன் 2:மான் மரை முயலுடும்பு மற்றுமுள்ள பன்றிக்குட்டி
மாண்டு மடிந்திடவே வீசிடுவோம் அம்புதனை.

வேடன் 1 : ஓரான் ஓரான் ஓடுது பார் காளைப்பண் சாலையிலே
குனிந்து நிமிர்ந்து நாணியக்கி கணை தொடுப்போம் தோழனே.

வேடன் 2 : வேக வேகமாக வரும் வேங்கைப்புலி தன்னையுமே
மடக்கி மறித்து அதை மாட்டி அடிப்போமே.

வேடன் 1 : பத்தைக்குள் இருந்து முயல் பக்கெனப் பாயுதுபார்
சீக்கரமாய் வேல் எறிந்து துரத்திப்பிடி தோழனே.

வேடன் 2 : பெட்டை மானும் குட்டிகளும் பேதளித்தே ஓடுதுபார்
காட்டில் புகுந்து மறையும் முன்னே தாவிப்பிடி தோழனே.

வேடன் 1 : கொக்கட்டிமரத்தினிலே கொக்கொண்டு இருக்குது பார்.
குறிவைத்து எறிந்து வீழ்த்தி எடுத்துமே ஏகிடுவோம்.

**வேடன் 2 : வசனம்,** கேளும் தோழனே, வேட்டையில் ஒரு மிருகங்களும் படவில்லை ஆகவே காட்டில் உள்ள காய், கனி, தேன் எடுத்துச் செல்வோம் வருவீராக.

**வேடன் 1 : வசனம்**

கேளும் தோழனே அதோ கொக்கட்டி மரத்தடியில் தேன் பூச்சிகள் பறக்கின்றன. வாரும் அவ் விடத்தில் சென்று அந்த மரத்தை வெட்டி தேன் எடுத்துச் செல்வோம் தோழனே.

**சபை விருத்தம் :**

தேனது எடுக்க வென்று திகடன் மரத்தை வெட்ட
மரத்தினில் இருந்து இரத்தம் சீறியே பாய்ந்ததுவே
கரத்தில் இருந்த கத்தி வில்லுமே நழுவி விழ
செய்வதறியா வண்ணம் திகைப்புடன் நின்றனரே.

தரு 1: என்னவென்று அறிகிலேன் ஏது நாம் செய்குவோம்
தோழனே தோழனே,
கொக்கட்டி மரத்திலே குருதியாய்
பாயுதே தோழனே தோழனே.

தரு 2: இந்த விந்தைதனை நாச்சியார் தன்னிடம்
தோழனே தோழனே சென்று நாம் கூறுவோம் வாருமென்
கூடவே தோழனே, தோழனே.

**திகடன் வசனம்** :

கேளும் தோழனே இந்த அதிசயத்தை மண்முனை ராச்சியத்தில் உள்ள உலக நாச்சி அரசியிடம் சென்று கூறுவோம் தோழனே.

**வேடர்கள் விருத்தம் :**

அரசியே உன்னை நாமும் தரிசனம் செய்தோம் போற்றி
அதிசயம் ஒன்றுகண்டோம் உம்மிடம் கூறவந்தோம்
காட்டினில் வேட்டை நாங்கள் கருதியே ஆடித் தேனும்
எடுக்கேவே மரத்தை வெட்ட இரத்தமே பாய்யுதம்மா.

**உலக நாச்சியார் வசனம் :** கேளும் வேடுவர்களே நீங்கள் கூற வரும் விடயம் என்னவென்று விளக்கமாக கூறுங்கள் வேடுவரே,

**தரு**

வேடன் 1 : என்ன வென்றறிகிலோம் ஏது நான் கூறுவேன் அரசியாரே
அந்த விந்தை சேர் மரத்தினில் விசும்கள் கண்டோமே அரசியாரே

வேடன் 2 : தேனது எடுக்கவே மரத்தினை வெட்டினோம் அரசியாரே
வெட்டியவுடன் ரத்தம் ஆறாகப் பாயுதே அரசியாரே

வேடன் 2 : **வசனம்**

கேளுங்கள் அரசியாரே அந்தக் கானகத்தில் உள்ள கொக்கட்டி மரப் பொந்துக்குள், தேன் இருப்பதை அறிந்து தேன் எடுப்பதற்காக மரத்தை வெட்டிய போது, இரத்தம் தாரை தாரையாகப் பாய்ந்தது. நாங்கள் செய்வதொன்றும் அறியாமல், உங்களிடம் வந்தோம் அறிந்து கொள்ளுங்கள் அரசியாரே.

**உலக நாச்சியார் தரு**

என்ன மொழி தானுரைத்தீர் ஏங்குதையா என் மனமும்
அந்த விந்தை தன்னை சென்று பார்ப்போம்
என்னுடன் வாருமப்பா

**உலக நாச்சியார் வசனம்** : கேளுங்கோ வேடுவர்களே, அந்த அதிசயம் என்னவென்று சென்று பார்ப்போம், ஆகையால், என்னை அவ்விடம் அழைத்துச் செல்லுங்கோ வேடுவர்களே.

**வேடன் வசனம் [திகடன்] :** கேளுங்கோ அரசியாரே அதோ நிற்கின்ற கொக்கட்டி மரத்தில் தான் அந்த அதிசயம் நடந்தது. அறிந்து கொள்ளுங்கோ அரசியாரே.

**சபை விருத்தம்**

தேவியாம் உலகநாச்சி தன் சேலையின் பாதிதன்னை
மரத்தில் கட்டினாளே இரத்தமும் மறித்திடவே
நின்ற தோர் மரத்தடியில் இருந்த தோர் லிங்கம் தன்னை
எடுத்துமே அவ்விடத்தில் திருத்தலம் ஆக்கினாளே

### உலகநாச்சி தரு

ஐயோ சிவனே இதுவெல்லாம் உன்னிட செயலோ
உன்னிட தரிசனம் கண்டோமே இப்போது
பிறந்திட்ட பயனை நான் அடைந்திட்டேன் சிவமே.

### உலகநாதன் தரு

மட்டுமா நகரில் இது ஒரு திருப்படைத் தலமாய்
புகழ் பெறும் தலமாக ஒளி வீசப் போகுது
தான்தோன்றீச்சரம் என்னும் திருநாமம் கொண்டுமே

### உலகநாச்சியார் தரு

இத் தலம் தன்னில் ஆராதனை ஆற்றவே வேண்டும்
ஆகையால் நீரும். வடநாட்டுக் கொல்லத்து
பட்டர்கள் தம்மையும் வரவளையும் தம்பி

**வசனம் :** கேளுங்கோ தம்பியாரே இத் திருத்தலத்தில் பூசை செய்வதற்கு வடநாட்டுக் கொல்லத்தில் இருந்து பட்டர்களை வரவழைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யுங்கள் தம்பியாரே.

### பட்டர்கள் வரவு (விருத்தம்)

மண்ணெல்லாம் லிங்கமாக நிற்கின்ற ஈசன் தனை -
மதியில் நினைத்து வாழும் மதிப்புறு குலமே
- நாங்கள் -
பதியினைச் சரணடைந்து பக்தியோடடி பணிந்து -
பார் மீதில் வாழ்கின்ற வீரியச் சைவர்கள் நாங்கள்

தாளக்கட்டு : சேகணம் சேகணம் தைய தைந்தத்தா.....

**தரு**

பட்டர் 1 : வந்தோம் இதோ காண் பட்டர் நாங்கள் வாறோம்
இதோ பார்
வந்தோம் இதோ பாரும் விந்தையாகவே
தேவியாம் நாச்சிதன் சேதியறியவே.

பட்டர் 2 : உகந்ததோர் உடையும் உன்னதமாய் உடலெங்கும்
நீறும்

உருத்திராக்க மணிமாலை உகந்துமே அணிந்து நாம்
உலக நாச்சியாரின் சேதியறியவே.

பட்டர் 3 : முப்புரம் தன்னை எரித்திட்ட முக்கண்ணன் தன்னை
முன் முதற் கடவுளாய் முழுமனதுடனே நாம்
பக்தியோடவர் பாதம் பணிந்துமே வாழ்கின்றோம்.

பட்டர் 1 : தென் திசை தன்னிலே வாழ்கின்ற ஈசர் தம் பாதம்
தஞ்சமென்று நாமும் அவர் தாழ் பணிந்துமே
ஈழம் வந்து நாமும் இன்பமாய் அடைந்தோமே.

பட்டர் 2 : முப்புரி நூலும் முறையாக மூவரும் அணிந்து
மும் மூத்தி முதல்வனாம் சிவனைத் தியானம் பண்ணி
முறையாக மூவரும் சபை மீது வருகிறோமே.

பட்டர் 3 : மண்முனை தன்னை ஆளுகின்ற நாச்சியார் தானும்
அழைத்திட்ட காரியம் என்னவென்றறியவே
ஏகியே சபை மீது மேவியே வருகின்றோமே.

**பட்டர் விருத்தம் :**

அன்னையே உலகநாச்சி உன் திருவடி
பணிந்தோம் போற்றி
எம்மையும் அழைத்த செய்தி என்னவென்று
அறிய நாமும் நன்னயமாகவேதான்
நலமுடன் நாங்களுமே என்னவென்றுரையுமம்மா
எம்பணி தொடவேதான்.

### உலகநாச்சி தரு

வாருங்கோ பட்டர்களே கேளும் ஒருசேதி தன்னை
ஈசனவர் செய்த லீலை என்னவென்று கேட்டருளும்
கொக்கட்டி மரத்தடியில் தான்தோன்றி லிங்கமாக
எழுந்தருளியுள்ளார் இங்கு அறிகுவீரே நீங்களுமே

ஈசனார் கைலைநாதர் எம்மிட இராச்சியத்தின்
தென்மேற்குத் திசையிலேதான் எழுந்தருளி உள்ளாரிங்கு

**வசனம் :** கேளுங்கோ பட்டர்களே எம்பெருமான் கைலைநாதர் எமதுராச்சியத்திற்கு தென்மேற்கே உள்ள வனத்தில் கொக்கட்டி மரத்தின் கீழ் தானாகவே லிங்கமாக எழுந்தருளியுள்ளார். அத் திருத்தலத்தில் பூசை செய்து வழிபாடாற்ற வேண்டும். அதற்காகவே உங்களை அழைத்தேன் வாருங்கோ அவ்விடம் சென்று வழிபட ஏற்பாடுகள் செய்வோம் பட்டர்களே.

**உலகநாதன் தரு**

01. தானாத் தோன்றியதோர் ஈச்சரந்தான் சிறந்திங்கு திகழ்வதற்கு -
சிறப்பாக மூவேளை பூசைகளை நித்தமும் செய்வீரே.

02. ஈழத்தமிழரின் வரலாற்றில் சிறப்புடனே விளங்க -
தமிழையும் சைவத்தையும் நீருமேதான் பாரெங்கும் பரப்பிடுவீர்.

**வசனம் :** கேளும் பட்டர்களே எம் பெருமான் சுயம்புலிங்கமாகத் தோன்றிய இத்திருத்தலத்தில் நீங்கள் மூவரும் தினமும் மூன்று வேளை பூசை செய்வதோடு இத்திருத்தலத்தின் சிறப்பினையும், சைவத்தினையும், தமிழையும் பாரெங்கும் பரப்புங்கோ பட்டர்களே..

பட்டர் 1 :அரகரா சிவ சிவ சம்போ
அரனே உன் அடியார் நாம் அளித்திடும் பூசை
அன்பாகவே நீயும் இன்பமாய் ஏற்பாய்

பட்டர் 2 :தான்தோன்றி லிங்கமே சரணம்
தானவர் வானவர் மகிழ்ந்திட நாமும்
தயவுடனே பூசை செய்கின்றோம் ஏற்பாய்

பட்டர் 3 :சிவ சிவா நமசிவாயோம்
சீராகவே நாங்கள் பூசைகள் செய்வோம்
சிறு பிழை வந்தாலும் பொறுத்தருள்வாயே.

### தேவாரம்

கங்கையைத் தரித்தாய் போற்றி
கடவுளே காப்பாய் போற்றி
மான் மழு தரித்தாய் போற்றி
மங்கையோர் பாகா போற்றி
எம்பெருமானே எங்கள்
ஏகம்ப நாதா போற்றி
உன் சிறார் செய்யும் பூசை
உகந்துமே ஏற்பாய் சுவாமி

**சபை விருத்தம்**

தேவியாம் உலகநாச்சி திருப்பணிகள் செய்த பின்பு -
இணங்கு மதில் மண்டபங்கள் இணைந்ததோர்
ஆலயத்தை - கட்டுவித்து அபிடேகம் செய்தானே
தர்மசிங்கன் - அன்று முதல் ஆலயமும் சிறப்புற்று
விளங்கும் போது.

## பறங்கியத் தளபதி வரவு

**விருத்தம் :** போர்த்துக்கல் நாடு நாங்கள் புகழ் பெறு
கத்தோலிக்கர் -
நாடுகள் பலவும் ஆண்டு வாணிபம்
பல புரிந்து - ஈழத்தின் ஈச்சரங்கள் அடியோடு
அழிக்க வென்று - பறங்கியத் தளபதி
பதறியே வருகின்றானே.

தாளக்கட்டு : தாம் தெய்ய தோம் தருகிட தெய்யத் தா.........

**தரு :**

பறங்கியர் 1: வருகின்றோம் பாருமிதோ பறங்கியத் தளபதி
நானுமல்லலோ -
வருகின்றோம் பாருமே வண்ணமாய் குதிரையில் -
ஏகமாய் நண்பரும் கூடவே சபை நாடி.

பறங்கியர் 2: நம்மிட மதத்தினை இந்த நாடேங்கும் பரப்பிடவே
சிலோன் நாடு தன்னிலுள்ள சிவன்கோயில் தன்னையும்
சிதைத்திட வேண்டுமே சீக்கரம் நாங்களும்.

பறங்கியர் 1 : கொக்கட்டிச்சோலை தனில் இருக்கிதாம்
தான்தோன்றிலிங்கக் கோயில்
அவ்விடம் நோக்கியே செல்வோம் வாருமே
அதனையும் ஒருகை பார்ப்போமே இன்றைக்கே.

**வசனம் :** கேளும் நண்பரே பல சிவன் கோயில்களை அழித்து விட்டோம் இப்போது கொக்கட்டிச்சோலை எனும் இடத்தில் உள்ள சிவன் கோயிலையும் அழித்து விட்டு வருவோம் வாரும் நண்பரே.

### பூசகர் வரவு விருத்தம்

சிவ சிவா சிவனே என்று திருநீறுதான் அணிந்து
ஓம் நம சிவாயா என்று ஓதி தினமும் நானும்
தான்தோன்றிலிங்கமாக எழுந்துள்ள ஈசனுக்கு
திருப்பணிகள் செய்திடும் பூசகர் வருகின்றாரே.

தாளக்கட்டு : தத்திமி தையே தருகிட தித்திமி தோம் தெய்......

**தரு :** பூசகர் நானே சிவனிட நேசகன்.
நித்திய பூசைகள் நித்தமும் மூவேளை
தவறாமலே நானும் புனிதமாய் செய்கிறேன்.

பாதிமதியணிந்தோன் எம்பெருமான் பாதம் தனைப்போற்றி
பக்தியாய் அர்ச்சனை பக்குவமாய் செய்வேன்
அரனே சிவனே என்று அவர்தாள் பற்றியே.
(போத்துக்கீசர் வருதல் பூசகர் வருதல்)

ஐயர் : ஐய்ஐய்யோ நீங்கள் யாரப்பா சொல்லுமே
அபச்சாரமல்லோ, இவ்வுடையுடன் உட்செல்லாகுமோ.

பறங்கியத் தளபதி - வசனம்:
"ஏ" கூ ஆர்யூ என்ன இது. கூஆர்யூ யார் நீ இது என்ன?

பறங்கியர் : யாரடா நீ யாரடா சொல்லடா அது என்னடா
கூறடா பதில் கூறடா இல்லையேல் உன்னைக்
கொல்லுவேன்.

ஐயர் : பூசகர் நானே ஐயா இந்தக் கோயில் சேவகன்
நானே ஐயா
நந்திதேவரிவர் எம்பெருமான் வாகனமாயிடுமே.

பறங்கியர் : கேளடா அட பூசகா இந்த கல்மாடு புல் தின்னுமா?
சொல்லடா இப்போ இல்லையேல் உன் சாமி
பொய்யாகுமே.

பறங்கியர் : பேசடா அட பூசகா பேதலிக்கிறாய் இப்போ மாடது
கொடுத்த புல் இது தின்னுமா? அச்சமா பதில்
சொல்லடா.

ஐயர் : ஓம் ஐயா நந்தி புல்லுண்ணும்
நாளை மறுதினம் வாரும்.
நாடி வந்து நீ பாருமே அதையே.

**வசனம்** : கேளும் துரையே நந்திப் பெருமான் புல்லுண்ணும் காட்சியை நாளை மறு தினம் வந்து பாருங்கோ துரையே.

ப.வசனம் : கேளடா பூசாரி நீ சொன்ன படி நாளை மறுதினம் வருகிறோம். அந்த மாடு புல்லுண்ணா விட்டால் இந்தக் கோயிலை இடிப்பதோடு உன்னையும் உயிரோடு விடமாட்டோம் அறிவீராக.

(ஐயர் புலம்புதல்)

தரு 01 : ஈசனே! எனைக் காருமையனே உமையம்மை பாகா
ஏழை என்னை காருமையனே!

தரு 02 நாளை வந்தவர் நந்தி புல்லுண்ணும்மா
என்றென்னைக் கேட்டால்
நானே! என் செய்வேன் நீயே அருள்செய்வாய்

**வசனம்** : சிவ சிவா சிவனே எம்பெருமானே நாளை பறங்கியத் தளபதி நந்தி புல்லுண்ணுமா? என்று கேட்டு புல்

கொடுக்கச் சொல்லி நந்தி புல்லுண்ணா விட்டால் என்னையும் உயிரோடு விடமாட்டார் நீயே இதற்கு உபாயம் செய்து என்னை காத்து ரெட்சிக்க வேணுமையா சிவமே.

**சபை விருத்தம்**

இப்படியாய் பூசகரும் புலம்பி விட்டு உறங்கும் வேளை
பயப்படாதே பக்தா என்று இறைவனும் கனவில் கூற
கவலை மிகக் கொண்டிருந்த பூசகரும் மனமகிழ்ந்து
அன்றைய நாள் சிவபூசை அன்பாகத்தான் முடித்தார்.

பறங்கியர் மீண்டும் வருதல்

**தரு**

பறங்கியர் *1* : ஏகிச்செல்வோமே நாங்கலங்கே கூடிச்செல்வோமே
ஏகுவோம் இப்போதே எப்படி ஆனாலும்
கோயிலை உடைப்பதில் குறியது வைப்போமே.

பறங்கியர் 2 : கல்லான நந்தி புல்லுண்ணுமென்று - பொய்யுரை
செய்த பூசகர் தன்னையும் - புண்படச் செய்வோமே
நந்தியை நானுமே நாசப்படுத்துவேன்.

**தரு**

பூசகர் தரு *01:* ஆதியோன் சிவனே அருள்புரிந்தருளும் தற்பரனே
அன்னியர் வந்திங்கே அநியாயம் செய்வாரே
அரனாரே தான்வந்து அடியேனை ஆழ்வாயே.
(பறங்கியர் பூசகரை அரட்டுதல்)

*02.* ஐயோ சிவனே அடியேன் நான் அருளினேன் புல்லை
அன்பு வைத்து நீயும் இன்பமாய் ஏற்பாயே
அறியாத மூடரின் அறிவுக்கண் திறப்பாயே

**சபை விருத்தம்**


பூசகரும் கைக் கொண்டு அறுகம் புல் தான் கொடுக்க

நந்தியும் தானெழுந்து நறுக்கெண்டு புல் கடித்து
பெரும் சத்தம் போட்டு அது சாணமிட்டு
நிற்கையிலே
பறங்கியத் தளபதியும் பதறியே ஓடினானே

**போற்றி**

கொக்கட்டி மரத்தின் கீழ் உதித்திட்ட லிங்கம்
திக்கெட்டும் அருளாட்சி செய்கிறாய் போற்றி
கொக்கட்டிசோலையில் உறைகின்ற லிங்கம்
தான்தோன்றி லிங்கமாய் அமர்ந்திட்டாய் போற்றி.

சுபம்





## மனிசி எங்கே?

2013ம் ஆண்டு கிழக்குப்பல்கலைக்கழகம், கல்லடி சுவாமி விபுலானந்தர் அழகியற்கற்கை நிறுவகத்திற்கு நிர்முகன்வதை தென்மோடி கூத்துச்சாயல் நாடகத்தினை மகிழடித்தீவினைச் சேர்ந்த சகோதரி செல்வி ஜெகதா அவர்களின் தலைமையில் நிகழ்த்துதற்கு நண்பர்களான வ.வினோதன், சி. சிவகாந்தன், இ.குகநாதன் ஆகியோரும் அங்குபடித்துக் கொண்டிருந்த படியினால். எனக்கு கூத்தினைப் பழக்குவதற்கு பல்கல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிட்டியது நிர்முகன் தென்மோடி கூத்தின் சில ஆட்டமுறைமை பாடல்கள் பொதிந்த அந்த நாடகத்தினை பழக்குவதற்கு சந்தர்ப்பம் கிட்டியது. வ.வினோதன், சி.சிவகாந்தன் இருவரும் பாத்திரமேற்று நடித்தனர். இதனை தொடர்ந்து 2014

நல்லதங்காள், 2015 கும்பகர்ணன்வதை, 2016 கண்டியரசன், 2017 தக்கயாகம் ஆகிய கூத்துக்களையும் பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றியிருந்தேன்.

இந்த கால எல்லையில் நண்பன் திரு. இ. குகநாதன் அவர்களும் நானும் பல்கலைக்கழகம் சென்றிருந்த போது மதிப்புக்குரிய கலாநிதி திரு. சி. ஜெய்சங்கர் அவர்கள் என்னிடம் ஒரு புத்தகத்தினை கையளித்து. இதனை ஓர் கூத்தாக எழுதித் தரும்படி கூறினார். அதுதான் மனிதன் இருக்குறான். மனிசி எங்கே? எனும் புத்தகம். அதனை பெற்றுக்கொண்டு. சில நாட்களுக்குள் கூத்து வடிவாக்கி 01.12.2014 திகதி இந்தியாவின் தஞ்சைப்பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்த பேராசிரியர்கள், மாணவர்கள் விரிவுரையாளர்கள். உள்ளடக்கிய குழு நாகசக்தி கலை மன்றத்தினோடு. கூத்து தொடர்பான கலந்துரையாடல் நிகழ்த்துவதற்கு வருகைதந்திருந்தனர். அவர்களை அழைத்துக் கொண்டு கலாநிதி திரு. ஜெயசங்கர் அவர்கள் வந்திருந்த சந்தர்ப்பத்தில் கூத்துப்பிரதியினை அவரிடம் ஒப்படைத்தேன்.

# மனிசி எங்கே? (வடமோடி கூத்து)

## காப்பு விருத்தம்

ஒன்றை மருப்போனே ஓம் என்னும் பிரணவ ஒளியாக நின்ற கோவே
ஓங்கிய கரிமுகக் கடவுளே உன்னை நான் ஒருபோதும் மறந்திடேனே
உலகினில் மானிடக் குலமது குன்றாது வாழ்ந்திடச் செய்யும் பெண்ணின்
பெருமையைக் கூறவே பெருங்கதைப் பெருமானே உன் மீது காப்புத்தானே.

## கட்டியன் வரவு விருத்தம்

சிரசினில் முடியும் மின்ன நெற்றியில் நீறு துன்ன
கழுத்தினில் மாலை மின்ன இடுப்பினில் பட்டி துன்ன
காலினில் சதங்கை பூண்டு கையில் பிரம்பும் கொண்டு
மன்னவன் வருகை கூறும் மட்டில்லாக் கட்டியன் தோற்றினானே.

தாளக் கட்டு : தத்தித்தாம் தையதருகட தித்தித் தெய்யாத் தெய்யா.....

**தரு** :

கட்டியக் காரனும் வந்தேனே ஒய்யாரமாக
கட்டியக்காரனும் வந்தேனே
கட்டியக்காரனும் வந்தேன் கெட்டித்தனமாக
மன்னவன் ஈடிப்பஸ் வருகையை கூறவே.

கிரேக்கமா நகராளும் மாமான்னன் வருகின்ற செய்தியிது
வாருங்கோ அனைவரும் ஒன்றாக கூடுங்கோ.
அமைதியைப் பேணுங்கோ அறிவுரை கேளுங்கோ.

**மறுதரு** :

01. கேளுங்கோ சபையோரே மனிசியை ஏன் இங்கே விட்டுவிட்டீர்.
என்றுமே கேள்வியிது கேட்டுமேதான் சீக்கரம் விடைதருவீர்
02. பெண்ணியம் காத்திடுவோம் பெண்ணுரிமை என்றென்றும் பேணிடுவோம்
தன்னிகரில்லாத தாய்க்குலத்தின் தனித்துவம் போற்றிடுவோம்.

**வசனம்** : கேளுங்கோ சபையோரே கிரேக்க நாட்டுமன்னன் ஈடிப்பஸ் சபை மீது வருகிறார் அனைவரும் அமைதியாக இருந்து பெண்ணியம் பேசும் இக்கதையை சிரத்தையுடன் செவிமடுப்பீராக.

## மன்னன் வரவு விருத்தம்

கிரேக்கமா நாட்டு மன்னன் மதிப்புறு அரசனாவேன்
மக்கள் தன் நலனைமட்டும் மதியினில் நினைத்து வாழும்
மன்னவர் மன்னர் தம்மை அன்றைய நாளில்வென்ற
ஈடிப்பஸ் மன்னன் இதோ சபைதனில் மேவினானே.

தாளக்கட்டு : தகதா தெய்யா தெய்ய.....

**தரு**

மன்னாதி மன்னவர் மகிழ்ந்திங்கே
போற்றிடும் மன்னவன் சபை வந்தானே
மாமன்னன் ஈடிப்பஸ் கொலுவந்தாரே

பண்டுமா நகர்தன்னை பண்புடன்
ஆண்டிடும் மன்னவன் சபை வந்தானே
மாமன்னன் இதோ சபை கொலுவந்தாரே

## வேதாளம் (ஸ்பிங்ஸ்) வரவு

**விருத்தம் :** கண்ணது உறுட்டிக்கொண்டு காலது வகையுமாக
பசியது கொண்டதாலே மனமது மிகமெலிந்து
கடும் சினம் கொண்டு மேதான் கடுகிய நடைநடந்து
கண்டவர் பயந்திடவே வேதாளம் வருகின்றதே.

தாளக்கட்டு : தந்தா தகிட தகிடதா....

**தரு :** *1)*

வந்து புறப் பட்டெழுந்ததே வேதாளமும்
தந்திரமாய்த் தானெழுந்ததே
வந்து புறப்பட்டதுவே தன்பசியைத் தீர்க்கவென்று
கண்டவரைத் தான் பிடித்து அப்படியே விழுங்கிடுவே.

2)
என் பசியைத் தீர்த்திடவே மனிதப் பதரைக்கண்டுகொண்டேன்
இப்படியே நானும் சென்று அப்படியே விழுங்கிடுவேன்.

## வேதாளம், மன்னன் சந்திப்பு

**வே. தரு :** 1)
ஏய் மனிதப் பதரே உன்னை நான். என்பசிக்கு
இரையது ஆக்குவேன் பாராய்
அப்படியே பிடித்து விழுங்குவேன் பாரும்
தப்பிஓடிட நினையாதே பயலே
கெட்டித்தனமாக என்கிட்ட நீ வாரும்.

**ம.தரு :** 2)
ஏய் மிருகப் பிறப்பே என்னையும்
நீயேதான் யாரென்று எண்ணி கொண்டாயோ
அறிகுவாய் நீயும் அரை நொடி தனிலே
நானே நாட்டினின் அரசனென்றறிவாய்
உந்தனை நானும் விடுவேனோ பாரும்

**வேதாளம் வசனம் :** கேளடா மானிடா நீ மன்னனோ, பொதுசனமோ, பொதிசுமக்கும் கழுதையோ எனக்கு அது தேவையில்லை அறிந்து கொள்வாயாக.

**மன்னன் வசனம் :** அப்படியானால் உனக்கு என்னதான் வேண்டும் சொல்லும் மிருகமே.

**வேதாளம் தரு :** என்னவேண்டுமென்று என்னிடம் கேட்டாயே பா-தகா பாதகா. நான் படும் பாட்டினை என்னவென்று சொல்லுவேன் கேளடா கேளடா.

**மன்னன் :** என்னவென்று நீயும் எடுத்துரை செய்குவாய் என்னிடம் என்னிடம் முடிந்ததைத் தருவேனான் ஏற்றுக்கொள்ள வேண்டும் வேதாளம் வேதாளம்

**வேதாளம் ம.தரு :**

நான்போடும் புதிருக்கு விடையளிப்பாயானால்
உன்னை நான் விட்டு விடுவேனே பயலே
இல்லை என்று சொன்னால் இப்பொழுதே உன்னை
விழுங்கிவிடுவேனே பயலே

**வே.மறு. தரு :**

காலையிலே நான்கினாலும் மதியத்திலே இரண்டினாலும்
மாலையிலே மூன்று காலில் நடக்கும் விலங்கு எது?

**மன்னன். ம.தரு :**

நீ கேட்ட கேள்விக்கு நான் மனிதன் என்றுவிடையளித்தேன்.
எந்தனையும் என்னசெய்வாய். இந்தவிடம் தன்னிலேதான்.

**வேதாளம் வசனம் :**

கேளடா மன்னவா நீ கூறிய விடை பிழை
ஏனெனில் மனிதன் மட்டும் இல்லை.
அத்துடன் மனிசியும் இணைந்து வரவேண்டும்.
ஆதலால் நீ கூறிய விடை பிழை என்பதை அறிவாயாக.

**ம.வசனம் :**

கேளும் மிருகமே மனிதன் என்னும் போது
மனிசியும் அதற்குள் அடங்குகின்றாள்
தானே அதை அறிந்து கொள்ளும் மிருகமே.

**வேதாளம் தரு :**

மனிதன் என்று சொல்லி மனுசியைமறந்தாயே
மதிகெட்டமடையனே. பாரடா உன்னையும்
பதறவே துடிக்கவும் செய்கிறேன் பாராய்.

### சபை விருத்தம்

மனிதனே மட்டும் என்று மன்னவன் விடையும் கூற
அது விடை இல்லை என்று மறுத்துமே மிருகம் கூறி
மன்னவன் உடம்புடனே கண்ணது வற்றிப்போக
சாபமும் இட்டதுவே மன்னவன் வருந்திட்டானே.

**மன்னன் தரு :**

கண்ணது இருண்டு போய் கலங்குகிறேனையோ
தெய்வமே தெய்வமே
நான் செய் பிழையேதோ சாற்றுவாய் இப்போதே
மிருகமே மிருகமே

**வேதாளம் தரு :**

நீ செய்த பிழைக்கு நான் பதில் கூறமுடியாது
மன்னவா மன்னவா
சற்றே பொறுத்திரு சந்தேகம் தீருமே
மன்னவா மன்னவா

## தோழர்கள் வரவு

வாருமென் தோழா வளுத்தும் மொழி தன்னையே கேளாய்
மன்னவன் கூறிய விடையது பிழைதானே
என்னதான் செய்குவோம் இப்போது நாங்களும்.

ஏன் பிழை தோழா எனக்கதை எடுத்துரை செய்வாய்
எல்லோரும் அறிந்திட இப்போதே கூறுவாய்.
மன்னவன் அறியாமை அகலட்டும் நண்பனே.

மனிதன் தான் என்றால் ஆணாதிக்கம் அதுக்குள்ளே உண்டு.
ஆதலால் அப்படி கூறுதலாகாது.
மனிதர்கள் என்று சமத்துவம் பேணுவோம்.

**மறுதரு : 1.**

அப்படியே மெய்ப்படியாகும் என் தோழனே கேள்
மனிதன் எதிர்ச்சொல் மனிசியேயாகுமே

2.
மனிதன் நெருப்பை கண்டுபிடித்தானாம் என் தோழனேகேள்.
அப்பமனிசி என்ன செய்தாளோ?

3.
மனிதன் வேட்டையாடி வாழ்ந்தானம் என் தோழனே கேள்.
அப்பமனிசி கும்மியடித்தாளோ?

4.
மனிதன் சந்திர மண்டலம் போனான் என் தோழனே கேள்.
அப்ப மனிசி எங்கே போனாளோ?

**வேதாளம் தரு :**
இப்பொழுது புரிகிறதா மனிசியை நீ மறந்தாய் என்று
மனிதனுக்குள் மனுசியுமே அடங்கவில்லை என்பதினை.

ஒவ்வொரு ஆணுடைய வெற்றிக்குப் பின் பெண்கள் தானே.
பெண்களது உயர்வுக்கு தடையாக ஆண்கள் தானே?

**மன்னன் தரு :**
இப்பொழுது புரிகிறது. மனிதனுக்குள் மனுசியுமே.
அடங்கவில்லை என்பதினை அறிந்து கொண்டேன்
வேதாளமே.

**மன்னன் :**
ஆணாதிக்க அடிமையாக பெண்களையும் வைத்தார்களே
ஆதலாலே மனிதனுக்குள் மனுசியை நான் காணவில்லை.


**வேதாளம் மறு தரு :**
சரியிப்போ கூறும், என்னுடை கேள்விக்கு விடையை
காலையில் நான்குகால், மதியத்தில் இரண்டுகால்
மாலையில் மூன்றுகால் கொண்டு நடப்பதேதோ.

**மன்னன் 01 :**
மனிதர் மனிதர் மனிதர்கள் என்று சொல்கிறேன் விடையே
மனிதனில் மனிசியும் இல்லையென்றுணர்ந்தேனே
மனிதர்கள் என்றுமே சமத்துவம் பேணுவோம்.

**மன்னன் வசனம் :** கேளுங்கோ மிருகமே. மனிதனுக்குள் மனுசி அடங்கவில்லை என்பதை இப்போது. புரிந்து கொண்டேன். இனி மனிதர்கள் என்று தான் சொல்லுவேன் அறிந்து கொள்வீராக.

**வேதாளம் :** சரி நீ போகலாம் போய் எல்லோருக்கும் இதைச் சொல்வீராக.

சுபம்.



## உழவர் பெருமை

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எமது பிரதேச (ம.தெ. மே) கிளையின் ஒன்றுகூடல் முதலைக்குடா த.தே.கூ ஒன்றுகூடல் வளாகத்தில் இடம் பெற்றபோது. நானும், எமது நண்பர் திரு. வ. துசாந்தன் அவர்களும் கலந்து கொண்டபோது மாகாண சபையின் விவசாய அமைச்சராக இருந்த மதிப்புக்குரிய திரு.துரைராசசிங்கம் ஐயா அவர்கள் எமது கட்சியினூடாக ஒவ்வொரு வருடமும் பொங்கல் விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றோம். அதனடிப்படையில் எதிர்வரும் தைப்பொங்கல் விழாவினையும் சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதற்காக உழவர்களை போற்றும் வண்ணம், எமக்கான அரசியல் தீர்வினை வெளிப்படுத்தும்

வகையிலும் அமையவேண்டும் எனும் அடிப்படையில் கூத்தினை ஆற்றுகை செய்யவேண்டும் எனவும் என்னிடம் கூறினார்.

அதற்கமைய ஒரு கிழமையில் கூத்தினை எழுதி முடித்துவிட்டு, பழக்கிய பின்னர் கூத்தினை பார்வையிடுவதற்காக திரு. பொ. நேசதுரை அதிபர் அவர்களும், திரு. கு. ஜெயக்குமார் ஆசிரியர் அவர்களும் வருகை தந்து பார்த்த பின்னர் சில ஆலோசனை வழங்கினர். அவர்களது ஆலோசனை யினையும் உள்வாங்கி கூத்தினை நாகசக்தி கலை மன்றம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பொங்கல் விழாவின் போது 19.01.2017ம் திகதி மட்டக்களப்பு தேவநாயகம் ஐயா ஞாபகர்த்த மண்டபத்தில் ஆற்றுகை செய்தது.

## கூத்தில் ஆற்றுகை செய்த கலைஞர்கள்

01. கட்டியன் – ம. டினேஸ்கரன்
02. போடியார் – செ. சுந்தரலிங்கம்
03. வேலையளர்கள் – த. யோகநாதன்
வே. கோகுலதாஸ்
ச. தோசீலன்
அ. தர்சன்

# உழவர் பெருமை

## காப்பு விருத்தம்.

வேளமுகம் கொண்டவா வேல்முருகன்
முத்தவா வேண்டும் வரம் தந்தருளவா
வேதமுனி விளம்பிய விதி முறைதவறாமல்
பாரதம் படைத்த தேவா.
இன்னல்கள் இன்றியே இலங்கைத்திரு
நாட்டிலே இதயங்கள் ஒரு மித்தாய்
இனமத மொழிக்கப்பால் உள்ளதோர்
அன்பினை அருளுவாய் காப்புத்தானே.

## நாடகக் காப்பு விருத்தம்

காடுகள் வெட்டி நாங்கள் களனிகள் கண்ட பூமி
எருதது கொண்டு ஏர் பூட்டியே உழுததேசம்
இனிப்பசி இல்லை என்று உலகத்தோர் போற்றுகின்ற
உழவர்தம் புகழைப்பாட ஒருமிப்போம் இன்று நாமே.

## கட்டியன் வரவு விருத்தம்

உலகினை உருளச் செய்யும் உழவர்தம் உயர்வைப்பாட
உற்றதோர் கட்டியன் நான் உரிமை கொண்டுங்கள் முன்னே
கட்டளையிட்டுமே தான் கருமத்தையாற்றி நானும்
கருத்தினை கூறவென்று களரியில் வருகின்றேனே.

தாளக்கட்டு : தத்தித்தாம் தருகிட தித்தித்தெய்யா.............

## கட்டியன் தரு

01. பட்டுவண்ண வேட்டி கட்டியே நல்ல
பயனுள்ள கதைகளைப் பேசிட
திட்டமாய் கட்டியன் சிறப்பாய் சபைநாடி
சட்டங்கள் போட்டுமே சமத்தாக வருகின்றேன்.

02. பட்டதுயர் துன்பம் போகட்டும் இனி ப்ாரை நாம்
ஆளுவோம் வாருங்கள் பாட்டமுப்பாட்டான் ஆண்ட எம்
பூமியில் ஓர் இனப்பயிர் செய்வோம் ஓடியே வாருங்கோ.

03. "உழுதுண்டு வாழ்வாரே வாழுவர் மற்றோர்
தொழுதுண்டு பின் செல்வர்" என்றாரே. வள்ளுவர்
வார்த்தையை மறுப்பாரும் யார் உண்டோ வாருங்கோ
வளமான வாழ்வினைத் தேடுவோம்.

வசனம்: கேளுங்கோ சபையோரே
இன்று நாம் உழவர்தம் பெருமையை கூற
உங்கள் முன் வருகின்றோம் .
கதையினை காதாரக் கேட்டு கருத்தறிவீராக.

## போடியார் வரவு விருத்தம்

ஆடியில் உழவுதானும் தேடியே அடிக்கவேணும்.
அன்று முன் எம்மோர் சொன்ன அறிவுரை தன்னை ஏற்று.
செப்பமதாக நாங்கள் திருத்திய வயல் வெளியில்
நெற்பயிர் செய்யவென்று போடியார் வருகின்றாரே.

தாளம் : தத்திமித்திமி தொம் தருகிட..................

**தரு**

போடியார் வந்தாரே பொன்னம்பலப் போடியார் வந்தாரே
போடியார் வந்தாரே வயல் வெளிதான் போக
மாட்டுவண்டி பூட்டி மள்ளர்கள் தான் கூட.

நாற்றுகள் தான் விதைக்க நல்லதொரு நாளது தான்பார்த்து
நண்பகல் கழியுமுன் நாங்களும் ஒருமித்து
நாளைய நாட்களை நலம் பெற மாற்றிட.

## வேலையாட்கள் விருத்தம்

ஐயாவே போடியாரே அருளுமோர் வார்த்தை கேளும்
மெய்யாக நெல்விதையை விதைக்கவே வேணும் தானே
செய்யவே வேண்டியதோர் கருமங்கள் என்ன வென்று
எடுத்துரை செய்ய வேண்டும் என்னவென்றறியத் தானே.

வசனம்: கேளும் போடியாரே நாங்கள் செய்ய வேண்டிய கருமம் என்னவென்று கூறுங்கள் போடியார்.

## போடியார் தரு

01. முத்துச்சம்பா நெல்முளையை தம்பி என் தம்பி
முன்னே விதைக்கவேணும் நீங்கள் என் தம்பி.

02. சம்புச்சம்பா நெல்முளையை தம்பி என் தம்பி
தானே எடுத்துவாரும் தம்பிமாரே நீங்கள்.

**வேலைக்காரன் தரு :**

போடியாரே சொன்னபடி செய்தோம் என்னையா.
சம்புச்சம்பா கொண்டுவந்தோம் சொல்வீரிப்போ
என்ன செய்ய.

**போடியார் வசனம் :**

கேளுங்கோ தம்பிமாரே இவைகளை
மேற்கண்டத்தில் விதைத்து
விட்டு உழுது மூலகால கொத்தி,
அழைப்போட்டு விட்டு வாருங்கள்
நான் வீடு செல்கிறேன் தம்பிமாரே.

## சபை விருத்தம்

வேலியாம் காவல் கட்டி வேளாமை விளைந்த பின்னே
வேலையாட் கூட்டி அப்போ முகாமையின் கீழே ஏகி
அறுபடை செய்ய வென்று அனைவரும் ஒன்று கூடி.
ஒரு கரம் கத்தி கொண்டு வயல்வெளி தன்னில் வந்தார்.

## வேலையாட்கள் விருத்தம்

வேளாமை வெட்டிநாங்கள் விருப்புடன் சூடு வைக்க
வேண்டிய ஆட்கள் கூட்டி விளை நிலம் காணவென்று
மூப்புற விளைந்த செந்நெல் முழுவதும் வெட்டவென்று
ஒப்புடன் நாங்கள் இன்று ஒருமித்து வருகின்றோமே.

தாளக் கட்டு : தத்திமி தெய்யே தருகிட.................

## வேலையாட்கள் தரு

**வேலை – 01**

வேலையாட்கள் வந்தோமே வயல் வெளி
வேலையாட்கள் வந்தோமே
வேலையாட்கள் வந்தோம் வேளாமை வெட்டவே
தண்ணீச் சோறு தானும் சமத்தாய் எடுத்துக் கொண்டு.

**வேலை – 02**

கூனந்தாக்கத்தி கையில் ஏந்திய நல்ல
கூடிய ஆட்களைக் கூட்டியே
வானம் வெளிக்குது வாருங்கோ வயல் வெட்ட
வாடிப்பங்கு தன்னை முன்னமே வெட்டுவோம்.

**வேலை –03**

வெட்டுது இல்லையடா இந்த கத்தி வெட்டுது இல்லையடா
வெட்டுது இல்லையே வேடிக்கை என்னவோ
வேலையறியாத கொல்லனிடம் போவோம்.

**வேலை –01**

கத்திக்கு காசுமது கையோடு வாங்கிய
கொல்லனவன்
எங்கே போனானென்று தேடுவோம் வாருமே
தேடிப்பிடித்தவன் சில்லறை தேடுவோம்.

## சபை விருத்தம்

இப்படி கூறிக்கொண்டு துப்பரவாக வெட்டி
உப்பட்டி கட்டவென்று உகத்தநோர் நாளைப் பார்த்து
மட்டில்லாச் செந்நெல் கட்டு தனையே சுமந்து கொண்டு
ஒப்பில்லாச் சூடுவைக்க உவப்புடன் வருகின்றாரே!

## தரு

**வேலை – 01**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று
சொன்ன சொற்படிக்கு உப்பரிகை போலே
சூடு உயர்த்தி வைப்போம் ஒற்றுமையாய்.

**வேலை –02**

கோடையாலே மழையுமிருளுது கூட்டுங்கோ
கதிர்கள் லெல்லாம்
வாடையாலே மழையுமிருளுது வாருங்கோவன்
சூடு வைப்போம்.

**வேலை –03**

பள்ளம் பார்த்துப்படிகள் வெட்டி பதனமாய் கட்டைச்
சுமந்து பொல்லாங்குகள் நேர்த்திடாமல்
போரேற்றி வைத்திடுவோம்.

**வசனம் :**

கேளுங்கோ தம்பிமாரே நாம் ஒற்றுமையாக சூடுவைத்து
விட்டோம் இனி சூடு அடிக்கவேண்டும் அதற்கு
ஆயத்தமாகுங்கோ தோழார்களே.

## தரு

**வேலையாட்கள் 01.**

மாட்டையும் சாச்சிடுங்கோ தோழர்களே சூட்டை அடித்திடவே பாட்டையும் பாடுங்கோ மாட்டையும் சாயுங்கோ பொலி பொலி பொலி என்று பூமாதாதனைப் போற்றி.

02.

ஒருதாய் பிள்ளைகளாய் நாமலின்று ஒருமனதாகவே!
தான் நாளைய காலங்கள் நமதே நமதென்று
ஓயாத உழைப்பினால் ஒரு தேசம் காணுவோம்.

03.

மாட்டையும் துரத்திவிட்டு அளக்கும் சேரிதன்னையே
எடுத்துவந்து அவணக் கணக்கையும் பாருங்கோ
நீங்களும் நல்லதோர் காலமும் கனிந்து வருகுது.

01. ஒன்றே குலமென்போம் நமக்கெல்லாம்
ஒருவனே தலைவனென்போம் கட்சி பேதமின்றி
கருத்துடன் நாமளும் சுறுசுறுப்பாகவே
மூடை சுமப்போமே.

02. இரு கரம் தட்டினாலே ஓசையது உருவாகும் அதுபோலே
இருபெரு நிலங்களும் இணையனும் இணைந்தாலே
அதிக விளைச்சலும் அதற்கு மேல் பயனுண்டு.

வசனம் : கேளுங்கோ தோழர்களே வயல்கள் எல்லாம் வெட்டி, சூடும் மிதித்து விட்டோம். எமது கூலிகளை போடியாரிடம் சென்று பெற்றுக்கொள்வோம். வாருங்கோ தோழர்களே!

## போடியார் விருத்தம்

போடியார் பொன்னம்பலம் பொருத்தமே பார்த்து அந்த
வேலையாள் வெட்டுக் கூலி தன்னையே கேட்டுப் பார்த்து
கண்ணியமாகவே தான் கணக்கினை பார்க்க வென்று
போடியார் நானுமிப்போ புறப்பட்டு வருகின்றாரே.

**வசனம் :** கேளுங்கோ தம்பிமாரே உங்களது கணக்கு வழக்குகள் என்னவென்று கூறுங்கள் கூலி தரவேண்டும் தம்பிமாரே!

**வேலை வசனம்** : கேளும் போடியாரே மேல்கண்டத்துக்கு 30அவணமும் பள்ளக் கண்டத்துக்கு 20அவணமும், இரண்டுக்கும் 50 அவணம் நெல் தரவேண்டும். அறிந்து கொள்ளுங்கள் போடியாரே.

தரு

01. இரண்டுமே என் பூமி இரண்டாக பிரிப்பதேன் தம்பிமாரே.
ஒன்றாக கேளுங்கோ உயர்வுடன் வாழலாம் தம்பிமாரே.

02. இயற்கை நலம் காத்தால் நமது நலமோங்கும் தம்பிமாரே.
நஞ்சற்ற உணவுண்டு நலமுடன் வாழலாம் தம்பிமாரே.
நாட்டிலே நல்லாட்சி நலம்பெற நடக்குது தம்பிமாரே
நல்லிணக்கமது நாடியே வருகுது தம்பிமாரே!


05. உங்கள் உடலுழைப்பு வீணாகப் போகாது தம்பிமாரே.
உங்களின் ஊதியம் தன்னைத் தருகிறேன் தம்பிமாரே.

**தரு**

அறியாமல் நாங்களும் அப்படிச் சொன்னோமே போடியாரே
சொன்னபடி நீங்கள் ஒன்றைத் தாருங்கள் போடியாரே.

**வசனம் :** கேளுங்கள் போடியாரே கணக்குக்கு இலகுவாக அப்படி கூறினோம் நீங்கள் கூறியபடி ஒன்றாகத் தாருங்கள் போடியாரே.

சுபம்.





## மதுவின் கொடுமை

2015 ம் ஆண்டு மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதய சமூகவள நிலையத்தில் வேள்ட்விஷன் நிறுவனத்தின் அனுசரனையோடு குடி நோயாளர்களை இனங்கண்டு அவர்களை குடியிலிருந்து விடுபட வைப்பதற்காக பயிற்சிப்பட்டறையில். பட்டிப்பளை பிரதேசத்தின் வேள்ட்விஷன் நிறுவனத்தின் திட்ட ஊக்குவிப்பாளர்கள், சில தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் நானும் ஒருவன் இந்த பயிற்சி நெறி டொக்டர் யூடி அவர்களால் எங்களுக்கு வழங்கப்பட்டது. பயிற்சி முடிவின் மூன்றாம் நாள் டொக்டர் அவர்கள் உங்களது பிரதேசத்தினை அடையாளப்படுத்துகின்ற ஓர் கலைவடிவினூடாக குடிநோயினால் பாதிக்கப்பட்டர்களை விழிப்பூட்டும் வகையில் ஓர் நிகழ்வினை, செய்து காட்டவேண்டும்.

அதற்காக அரை மணித்தியாலம் வழங்குகின்றேன். என கூறிச் சென்ற பின்னர். கூத்தினுடாக நிகழ்த்திக் காட்டுவோம் என அனைவரும் முடிவெடுத்து கூத்தினை எழுதி பழக்கி, அவ்விடத்திலே நிகழ்த்திக் காட்டினோம். இதில் அனைவரும் பெண்களே பாத்திரமேற்று நடித்தனர் என்பது சிறப்பம்சமாகும்.

இந்த கூத்து 15 நிமிடத்திற்கு உட்பட்டதாக அமைந்திருந்தது. சமூகத்தின் மத்தியில் மதுவின் கொடுமையினைப் பற்றி கூறப்பட்ட விடயம் இதில் போதாமையினாலும் கூத்து புத்தக உருவுக்கு உட்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமையினாலும் புதிய கதாபாத்திரம் முக்கிய கருத்துக்கள் உள்ளடக்கியதாக கூத்தினை மெருகூட்டி 1.30 மணித்தியாலத்திற்கு உட்பட்டதாக கூத்தினை அமைத்துள்ளேன்.

## மதுவின் கொடுமை

### காப்பு விருத்தம்

மண்ணதில் பிறந்தெய்த மானிட குலமென்றும்
வாழ்வாங்கு வாழத்தானே.
மெய்ஞான தத்துவம் அறிவியல் சாசனம்
எத்தனை இருந்துமிங்கே
அறியாமை வலையிலே அடிமையால்
அலைகின்ற அன்பர்தம் இன்பவாழ்வு
இன்றதில் என்றுமே மாற்றங்கள்
நிலவிட கணபதி காப்புத்தானே.

### கட்டியன் விருத்தம்

மட்டு நகர் தன்னில் நாங்கள் மதுவினை ஒழிக்க வென்று
மட்டில்லா மதியினாலே மதிப்புறு சேவைசெய்ய
மனிதர்தம் மதிமயக்கும் மதுவதன் கொடுமை கூற
மகிழ்பெறு சபைநாடி கட்டியன் வருகின்றானே.

தரு : வாசக்கட்டியன் நானே சபைமேவும் நேசக்கட்டியன் நானே
வந்தேன் சபை நாடி வந்தோர்க்கு வந்தனம்
வடிவாக கதையினை கூறும் கட்டியன் நானே.

மாந்தர் மதிமயக்கி அவர் வாழ்வை அடியோடழிக்கு மந்த
மதுவின் அநியாய அவலத்தை கூறிட
அறிவுக்கண் திறந்திட அவைநாடி வருகிறேன்.

உடலால் வியர்வை சிந்தி
உழைக்கின்ற ஒரு தொகைப் பணத்தை
குடித்து அழித்தாலே குடும்பத்தின் நிலை என்ன?
குலப் பெருமை தன்னை குன்றிடச் செய்யுமே.

**மறுதரு :**

அதுமட்டுமா கேளுங்கோவன் லோன்காரன் பின்னால்வாறான்
அவதானம் கொள்ளவேண்டும் அல்லல்ப்பட கூடாதம்மா.

முறையான திட்டமில்லை முற்போக்கு சிந்தை இல்லை
முற்றாக நம்மையெல்லாம் மூடராக்கப் பாக்கிறார்கள்.

எதிர்காலம் செம்மையாக செழித்தோங்க வேண்டுமானால்
எல்லோரும் சிந்திப்போமே சிறப்பாக வாழத்தானே.

**வசனம் :** கேளுங்கோ சபையோரே. எவனோ ஒருவன் வாழ்வதற்கு எமது உழைப்பின், பெரும்பங்கை கரியாக்கி, அடிமையாக நிற்குகின்றோம், அடிமைத் தனத்திலிருந்து மீளவேண்டும். சிந்தித்து செயலாற்றி நற்காரியங்களை முயற்சித்தால். நாளை நமதாகும். வாழ்வு வளமாகும். அறிந்து கொள்வீராக.

## குடும்ப வரவு

## நல்லையன் விருத்தம்

மனைவியும் மகனும் கூடி மகிழ்வுடன் நானுமிப்போ
மதிப்புடன் மக்கள் வாழ்வு மலர்ந்திட மனதிலெண்ணி
நாளது தவறாவண்ணம் கூலிக்கு வேலை செய்யும்
நல்லையன் தானுமிப்போ சபைநாடி வருகின்றானே.

தாளக்கட்டு : தகதிகதா தெய்யா தெய்யா...................

**தரு :**

ஒரு நாளும் தவறாமல் ஒழுங்காகவே
நானும் ஒவ்வொரு நாளுமாக
கூலிக்கு வேலைகள் செய்துமே
வாழந்திடும் நல்லையன் கொலுவந்தானே.

பாடுபட்டு உடல் வியர்வைகள்
சிந்தியே வேலைகள் செய்வேனே

வருமானம் காணாமல் வருவது என்னவோ
வறுமையில் வாடுகிறேன்.

**மறு தரு :**

வாருமே வள்ளி வளுத்தும் மொழி
தன்னையே கேளாய்
வாரலோன் காரன் எப்போ இங்கே
வருவானோ கூறும்.

மாதலோன் காரன் வருவானே
அதற்குள்ளே நானும்
கூலிக்கு வேலை செய்து
விட்டு வருகிறேன் பின்னே.

**வசனம் :** கேளும் வள்ளி, கடன் காரன் எப்போ வருவான். அதற்குள் நான் வேலைக்கு போய் வருகிறேன் பெண்னே.

**வள்ளி தரு**

என்ன செய்வேன் என்னவரே
என்மனத்துயரம் தன்னை
என்ன வென்று சொல்வேனிப்போ
என்மனம் நடுங்குதப்பா.

கிழமை ஒரு புதன்கிழமை வருவான்
வார லோன் காரனும்
வந்துபல வார்த்தையாலே பாடுவானே
என்னையவன்.

மாதமொரு பத்தாம் தேதி வருவான்
மாத லோன் காரனும்
எடுங்கோ காசை என்று
ஏசுவானே என்னவரே.

**வசனம் :** கேளுங்களையா தொழில் செய்யவென்று கடனெடுத்த பணத்தையெல்லாம் வீண்செலவு செய்து விட்டீர்கள். குடும்பச்செலவு, பிள்ளைகளிள் படிப்புச் செலவுக்கு வழியில்லை கடன்க-

ாரனும் வருவான். தொழில் கிடைக்காவிட்டால் பண்ணையாரிடம் வட்டிக்கு பணம் வாங்கி வாருங்கள். செலவு செய்து விடாதீர்கள் என்னவரே.

**முதலாளி வரவு விருத்தம்**

உழைப்பொன்றே உயர்வென் றென்னும்
உத்தம குணத்தைப் கொண்டோன்
ஊரிலே பண்ணைப்போடி என்றுமே
உயர்வு பெற்றோன்
உழைப்பவர் தங்களுக்கு உடன் தொழில்
நானும் கொடுத்து
ஊதியம் வழங்குகின்ற முதலாளி
வருகின்றாரே.

தாளக் கட்டு : தத்திமித் தெய்யே தருகிட ....................

**தரு**

முதலாளி தானே புறப்பட்டு வருகிறேன் பாரும்
ஊரிலே போடியார் என்று புகழ் பெற்றேன்.
ஓயாத உழைப்பாலே உயர்வுகள் பெற்றவன்

பண்ணையப்போடி பக்குவமாய் பதினைத்து ஏக்கர்
பண்படுத்தி நல்ல பயிர்வகை நாட்டியே
பத்தேக்கர் தென்னையும் அரையாண்டு பயிர்களும்

தொழில் நல்ல தொழிலும் தொல்லையில்லா
சொகுசான வாழ்வும்
சொல்லிய ரூபாய்க்கு மேல் தொகை கொடுத்துமே
வருடமும் பெறுகிறேன் வட்டிக்கு கொடுத்து நான்.

**நல்லையன் விருத்தம்**

முதலாளியாரே கேளும் பல இடம் திரிந்து நானும்
உன்னிடம் வந்தேனையா ஒரு தொழில் கிட்டவில்லை.
என்னிட மனைவி தானும் எங்கையா பணமும் என்பாள்
என்னதான் செய்வேனையா என்குறை தீர்ப்பாயிப்போ.

**நல்லையன் தரு**

போடியாரே நானுமிப்போ புகழும் மொழி கேளுமையா
வட்டிக்கு பணம் வாங்க வந்தேனையா உந்தனிடம்.

**போடியார் தரு**

எவ்வளவு வேணும் தம்பி எடுத்துரைப்பாய் எந்தனிடம்
இப்பொழுதே தந்திடுவேன் எடுத்துக் கொண்டு ஏகிடுவாய்

**நல்லையன் தரு**

மாதமூன்று ஆனவுடன் அசலுடன் வட்டியையும்
பத்தாயிர தர வேண்டும் பக்குவமாய் தந்திடுவேன்

**வசனம் :** கேளுங்கள் போடியாரே. எனக்கு பத்தாயிரம் ரூபாய் தந்தால். மூன்று மாதம் முடிவில் பணத்தினை வட்டியுடன் தருவேன் அறிந்து கொள்ளுங்கள்போடியாரே.

**வள்ளி தரு**

வாருங்கள் அத்தான் வாங்கிவந்த
பணம் எங்கே மச்சான்
தாங்கவன் சாமான்கள் வாங்கவே போகணும்
கடைக்கணக்குகளும் அப்படி இருக்குது.

**நல்லையன் தரு**

என்னடி கேட்டாய் எந்தனிடம் ஏது நீ கேட்டாய்
பணமது கேட்டாயோ பாரடி உந்தனின்
பல்லது உடைக்கிறேன் பக்கத்தில் வாடி நீ.

**வள்ளி தரு**

நாசமாப் போவான் குடித்து விட்டான் குடிகாரனையோ.
நானுமே என்செய்வேன் அரிசியும் இல்லையே
நாளைக்கு வருவானே லோன் காரன் இங்குமே.

நல்லையன் தரு

கடன் காரன் என்று நீயும் இங்கே கத்தாதே போடி
கேளடி அவனுந்தன் புரிசனோசொல்லடி
அவனையும் வெட்டுவேன் உன்னையும் வெட்டுவேன்.

**வள்ளி தரு**

ஐயோ இறைவா இதற்கெல்லாம் என்ன தான் செய்வேன்
எந்தனின் தலைவிதி இதுவாகப் போச்சுதோ
என் நிலை இதுதானோ தெய்வமே என்செய்வேன்.
(வேலையன் மயங்கி வீழ்தல்)

## வைத்தியர் வரவு விருத்தம்

தோளிலே குழலும் போட்டு
சொகுசான உடையும் பூண்டு
வடிவாகப் படித்த தாலே வைத்தியர்
பட்டம் பெற்றோன்
நோயாளர் தங்கள் நோயை
குழல்வைத்து கண்ணைப்பார்த்து
நொடிக்குள்ளே மருந்து செய்யும்
வைத்தியர் வருகின்றாரே.

**தரு**

01. வைத்தியர் வந்தாரே வடிவாக வைத்தியர் வந்தாரே
வைத்தியர் வந்தாரே மருத்துவம் பார்க்கவே
வைத்தியசாலையை தான் வந்து சேர்ந்தாரே.

02. வருடத்தில் ஆயிரம் பேர் வந்து இங்கே வைத்தியம் பெறுகிறார்கள். வருத்தத்துடன் யாரும் இருக்கவும் வேண்டாமே. வாருங்கோ வைத்தியம் வகையாகப் பார்ப்பேனே.

**வசனம் :** கேளும் பிள்ளையே, யார் இவர், என்ன நடந்தது, என்று கூறும் பிள்ளையே

**வள்ளி தரு**

வைத்தியரே கேளுமையா என் வீட்டுக்காரரிவர்- வந்தாரையா
மதிய நேரம் மயங்கிக் கொண்டு வீழ்ந்துவிட்டார்.

**வைத்தியர் :** சோதித்துப் பார்ப்பேன் தங்கா தொலைவாக போயிருங்கோ சொன்னவுடன் வாருமம்மா கவலைகொள்ள வேண்டாமிப்போ.

**வசனம் :** கேளும் தங்கையே, இவரை பரிசோதித்து பார்க்கப்போகிறேன். நான் சொன்னதன் பின்னர் வாரும், இப்போது வெளியேசென்று அமர்ந்து கொள்வீராக.

**மறு வசனம் :** கேளும் தங்கையே சாராயம் அதிகமாக குடித்துள்ள படியினால் இரத்தச்சோகையும். அத்தோடு சிறுநீரகம் என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளது அறிந்து கொள்ளும் பிள்ளையே.

**வள்ளி தரு**

ஐய்ஜய்யோ நான் என்ன செய்வேன் எந்தனெண்ம் சரியாய்ப்போச்சே. என்னதான் செய்யவேண்டும் எடுத்துத்துரைக்க வேண்டுமையா.

**வைத்தியர் தரு**

என்ன புள்ள எண்ணியிருந்தாய் கொஞ்சம் கூடக் குடிப்பார் போல. ஒப்பரேசன் செய்யவேண்டும் ஒரு தொகைப் பணம் வேண்டும்.

**வள்ளி தரு**

அடகுவைக்க நகை இல்லை சோத்துக்கும் அரிசி இல்லை. இப்படி கொண்ட நானும் எப்படிப் பணம் எடுப்பேன்.

**வைத்தியர் :** அவசரம் இல்ல புள்ள ஆளை எழுப்பித்தாறேன் - ஊசொன்று போட்டிருக்கேன். கொஞ்ச நேரம் அங்கிருப்பாய்.

**வசனம் :** கேளும் தங்கையே இப்போது அறுவைச் சிகிச்சை செய்வது. அவசியமில்லை ஒரு சிறுநீரகம் பழுதடைத்து விட்டது. ஒன்று பழுதடையும் நிலையில் உள்ளது. ஆகையால் இனிமேல் குடிக்காமல் இருந்தால் காப்பற்றலாம் அல்லது இன்னும் இரண்டு வருடத்துக்குள் அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் தங்கையே.

**வள்ளி :** கேளுங்கையா, தற்போது அறுவச்சிகிச்சை செய்யும் வசதி இல்லை. அவர் எழும்பிய பின்னால் புத்திமதிகள் கூறி அனுப்பிவையுங்கள் ஐயா.

**நல்லையன் தரு**

ஐயாவே வைத்தியரே என்ன ஆச்சி எந்தனுக்கு - எடுத்துரை செய்ய வேண்டும் எந்தனிடம் நீங்களுமே.

**வைத்தியர் தரு**

எடுத்துரை செய்வேன் தம்பி என்வார்த்தை தன்னைக் கேளும் உந்தன் நிலை என்ன வென்று கேட்டறிவாய் தம்பி நீயும். ஒருபக்க சிறு நீரகம் ஓய்ந்து பல காலமாச்சி ஈரல் வெந்து வேகிப் போச்சி என்னவென்று சொல்லுவேன் நான்

**நல்லையன் :** என்னையா சொல்லுகிறீர் எந்தனுக்கு இப்படிநோய் எப்படியோ வந்ததென்று எந்தனுக்கு கூறுமையா.

**வைத்தியர் :** குடியாலே வந்த கேடு உங்களுக்கு தம்பியரே எந்தனுரை தன்னைக் கேளு எதிர்காலம் செழித்தோங்கும்.

**வசனம் :** கேளும் தம்பி உந்தன் நோய்க்கு காரணம் போதைப்பொருட்பாவனையும் குடிப்பழக்கத்தாலும் ஏற்பட்டதாகும் நான் சொல்லும் படி நடந்தால், நீ இந்த நோய்களில் இருந்து விடுபடுவாய் அறிந்து கொள்ளும் தம்பியாரே.

**நல்லையன் வசனம் :** கேளுங்கள் ஐயா உங்களினது சொற்படி நடக்கிறேன் கூறுங்கள் ஐயா.

**வைத்தியர் தரு**

குடியாதே தம்பி உந்தன் வீடு விடியாது கேளு.
உன்னிட உடலுக்கும், உளத்துக்கும் அது கேடு.
அது மட்டுமா தம்பி இன்னமும் சொல்லுகிறேன்.

குடும்பத்தில் குழப்பம் அதனாலே குழந்தைகள் வாழ்வு
பொல்லாத குடியாலே பொடிப் பொடியாகுது
குழிதோண்டிப் புதைத்திடும் உந்தன் குலத்தையே.

உச்சி முதலாய் தம்பி உந்தன் உள்ளங்கால் வரைக்கும்
உன்னிப்பாய் நோய் பல ஒன்றின் பின் ஒன்றாக
உன்னிட உடலிலே ஒருமித்து சேர்த்திடும்

உன்னிட மனைவி ஊரானோடு போறாளோ என்று
உள்ளத்தால் உந்தனின் உத்தமி தன்னையே
உண்மையாய் எண்ணுவாய் உளநோய் தன்னாலே.

போதைப் பொருளுக்காய் ஒவ்வொரு நாளும்
செலவிடும் காசை
கண்ணியமாய் தம்பி நீ கணக்கிட்டுப் பார்ப்பாயானால்
கண்டறிவாய் உந்தன் கடுஞ்செலவுதனை.

**வசனம் :** கேளும் தம்பி குடி குடியைக் கெடுக்கும் குடிப்பழக்கம் நாட்டையும் கெடுக்கும் என்பதற்கிணங்க, மதுபானம் உட்பட்ட போதைபொருட்களைப் பாவிப்பதால் தனிநபருடைய உடல், உளம், பாதிப்படைவதோடு. சமூக அபிவிருத்தியில் வீழ்ச்சியும் ஏற்படுகின்றன. எனவே மதுபாவனையற்ற சுபீட்சகரமான சமூக மயமாக்கத்திற்கும், குழந்தைகள் எதிர்காலம் சிறக்கவும். போதையற்ற உலகை உருவாக்க வாருமென் தம்பியரே.

### மனைவி, மகன் தரு

**வள்ளி :**

தம்பியரே வாருமப்பா தந்தையாரை இன்னும் காணேன்.
எந்த இடம் தன்னிலே தான் ஏகினாரோ தம்பியாரே.

**மகன் :**

என்ன ஆனார் என்று நானும் அறிந்ததுடனே எந்தனம்மா
ஆனதினால் நானுமிப்போ அறித்தோடி வாரேனிப்போ.

### மறுதரு

**வள்ளி :**

வாரும் வாரும் எந்தன் அண்ணா வந்தவகை சேதி என்ன
எப்படி நீர் நலம் தானே குடும்பத்தோர் சுகந்தானே.

### மறுதரு

**சகோதரன் :**

நலமாக நானிங்கு நாடியேவந்தேனே தங்கையாரே நானும்
தயவாக ஒரு செய்தி தானுரை செய்குவேன் தங்கையாரே

உன்னிட கணவனும் ஊராரோடு கூடி தங்கையாரே
குடித்து விட்டு அவன் நடுரோட்டில் கிடக்கையில் தங்கையாரே

மாலுக்கு மரமேற்றி வந்த ஒரு லொறி தங்கையாரே.
மனிதனின் மேலாலே ஏறியே சென்றதால் தங்கையாரே.

**வசனம் :** கேளும் தங்கையே உனது கணவன் யாரோ இரண்டுபேருடன் கூடி குடித்து விட்டு. ஊருக்கு எல்லையில் உள்ள ரோட்டில் கிடந்ததால் மரமேற்றிவந்த வாகனம் ஏறி இறந்து விட்டான். அதோ காவிக்கொண்டு வருகிறார்கள். அறிந்து கொள்ளும் தங்கையாரே.

### புலம்பல் தரு

### வள்ளி

ஐய்ஜய்யோ என்தன் கணவனல்லோ
நீயும் அநியாயமாகவே மாண்டினையோ

உந்தன் விதிவசமோ - இல்லை மதுவின்
கொடுமையோ நானறியேன்.

பள்ளி செல்லும் பிள்ளையவன்
படிக்க வழியதற்கேது செய்வேன்.


### மகன் தரு

சாராயக் குடியினாலே
நீயும் சாக வீதியாச்சோ தந்தையாரே.
தந்தையில்லாப் பிள்ளையென்று
என்னை ஏளனம் செய்வாரே எந்தனப்பா.

## சபை விருத்தம்

தாயுடன் பிள்ளை கூடி தவீர்த்திடும் வேளைதன்னில்
தக்கதோர் துணையதாக வருபவர் யார்தானப்பா
மதுவினைத் தயாரிக்கும் மகத்தான மனிதர்களா
தொழிலுக்காய் விற்றுவாழும் வியாபாரக் காரர்களோ
இதுபோன்ற எத்தனையோ குடும்பத்தின் இன்னலுக்கு
யாரப்பா யார்தானேன்று கூறுவீர் கூறுவீரே.

சுபம்.



# அண்ணாவியமார்
# வாண்மை விருத்தி.

ஆதிமூர்த்தியைத் தோத்தரித் கொண்டு அண்ணாவி என்னும் புனித பணியினை விளக்க முயலுகின்றேன். "அடிபடுற மத்தாளம் பேர் வாங்கிற அண்ணாவி" என்னும் பழமொழி மட்டக்களப்புப் பிரதேசத்திலே குறிப்பாகக் கிராமப்புறங்களிலே விரவிக்காணப்படும் ஒரு பழமொழியாகும். அப்படியானால் மத்தாளத்திற்கும், அண்ணாவி மாருக்கும் இவைகளின் பெரும் பாலான பயன்பாடான கூத்துக்களுக்கும் இடையே ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத, அதாவது கூத்தின்றி மத்தாளமில்லை, மத்தாளமின்றிக் கூத்தில்லை என்னும் அளவிற்கு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இணைந்து இருப் பதனையே இது சுட்டி நிற்பதனை அறியமுடிகின்றது. இதனால் தானோ முதியோர்கள் புதுமணத் தம்பதியினரை வாழ்த்தும் போது "கூத்தும் மத்தாளமும் போல் கூடி நீடுழி வாழ்க" என வாழ்த்துகின்றார்கள்.

மட்டக்களப்பில் ஆடப்படுகின்ற கூத்துக்களான வடமோடி, தென்மோடி, வசந்தன், மகுடிக்கூத்துக்களிலே மத்தாளமே பெரும் பாலும் பயன்படுத்தப்படுகின்றது. இக்கூத்துக்களை முறைப்படி பயின்று விதிமுறைகளுக்கமைவாகப் புனிதமாக பயிற்றுவித்து நெறிப்படுத்துவர்கள் அண்ணாவிமார்களாகும். இதனால் தான் அக்காலத்தில் கூத்துத்தொடங்கும் முன் அண்ணாவியாரிடம்,

"அண்ணாவி என்பதற்குப் பொருளைச் சொல்லு
அடிக்கும் இரு கரங்களுக்குச் சொரூபம் சொல்லு
பண்ணான தாளமதின் பண்பு சொல்லு
பரிதியென வளைந்த தோலின் பொருளும் சொல்லு
கண்ணான வாருக்குக் கருத்துச் சொல்லு
கட்டி வந்த வேட்டிக்குப் பொருளைச் சொல்லு
திண்ணமுடன் களரிநிற்கும் இடத்தைச் சொல்லு
திறமுடனே சால்வைக்குத் தீரம் சொல்லு

மண்மகனே மத்தாளச் சக்தி சொல்லு
மனமுவந்து தென்வாசல் சந்தம் சொல்லு
கிண்ணென இசைக்கும் சல்லாரிச் சத்தம் சொல்லு
கிருடமெனும் தலைப்பாகைக் கருத்தைச் சொல்லு
மண்வளரும் மண்ணுயிரின் மகவைப் பாரும்
மத்தாளத்தை எடுத்து நீர் அடிக்கும் முன்னம்
அண்ணாக்குள் நின்றிலங்கும் ஆதி ஆனை
அல்லது களரியை விட்டு அகலு வாயே"

என்ற பாடலைப் பாடிக்கேட்க அதற்கான பதிலைச் சொல்பவரே பூரணமான அண்ணாவியாராவார். இப்பாடலைக் பாடி, *15.08.2017* இல் மண்முனைமேற்குப் பிரதேச செயலகத்திலே திரு. மூ. சிவானந்த ராசா கலாசார உத்தியோகத்தரின் ஒழுங்கமைப்பில், மண்முனை மேற்குபிரதேச செயலாளர் S. சுதாகர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவிமாருக்கான வாண்மை விருத்திச் செயலமர்வில் வளவாளராக பங்கு பற்றியபோது சமுகமளித்திருந்த இருபத்தாறு அப்பிரதேச அண்ணாவிமார்களிடம் கேட்கப்பட்ட போது, அவர்களில் ஒருவரும் சரியான பதிலளிக்காது, தாங்கள் மிகவும் பிரபல்யமான, அனுபவம் வாய்ந்த பழைய அண்ணாவிமார்களின் மாணவர்கள் என்றும், ஆனால் அவர்கள் இப்படிப் பாடலும் அதற்கான விடையும் இருப்பதனை எங்களுக்குச் சொல்லித்தரவில்லையென்றும், நீங்களே எங்களுக்குக் கூறுங்கள் என்றார்கள்.

"அண்ணாவி என்று சொன்னால் ஆதிமூர்த்தி
அடிக்கும் இரு கரங்களுமே சிவத்துள் சக்தி
பண்ணான தாளம் தான் "ததிந் ததிந்தா
பரிதிவட்டம் பரமசிவன் உரித்த தோலதாகும்
கண்ணான வாரதுவோ வாசுகி தான்
கட்டிவந்த வேட்டியதோ புலித்தோலாடை
திண்ணமான களரியது தில்லையம் பலம்
திறமுடைய சால்வையது நாகபாம்பு
மண்மகனே மத்தாளம் நந்திதேவன்
மனமுடனே தென் வாசல் தருவினாலே

கிண்ணென இசைக்கும் சல்லரியது பொற்தாளம்
கிரீடமெனும் தலைப்பாகை கங்கை, திங்கள்
மணிவளரும் மத்தாளத்தின் மாண்பு சொன்னேன்
மகத்துவமாய் மத்தளம் அடிக்கும் முன்னம்.
அண்ணாக்குள் நின்றிலங்கும் ஆதி ஆணை
அகன்றிடுவாய் இக்கருத்தை அறிந்து தானே"

நீங்கள் யாவரும் அண்ணாவிமார்கள் கூத்தின் சகல தன்மை களையும் அறிந்திருப்பீர்கள். ஆனால் நாம் இங்கு அத்தரவுகளை ஒழுங்குபடுத்தி, உங்களின் கருத்துப்பரிமாறலுடன் சரியான தகவலாக ஆக்கிக் கொள்ள முயல்வதே "அண்ணாவிமார்க ளுக்கான வாண்மை விருத்தி" செயலமர்வின் நோக்கமாகும். பாடலின் கருத்து விளக்கத்துக்கு வருமுன், சுருக்கமாக கூத்துக்கலையானது, தமிழர் பண்பாடு, கலை, கலாசாரத்துடன் கலந்த மிகவும் பழமையான கலையாகும். கலைகளுக்குள் பல தளங்கள் இருந்தாலும் கூத்துக்கலையே முதன்மை பெறுகின்றது. ஆதிமூர்த்தியான சிவனே ஏழுவகைக் கூத்துக்களை ஆடியதனால் தில்லைக் கூத்தன் என அழைக்கப்படுகின்றார். கூத்துக் கலையானது எமது தமிழ் இனத்தின் அடையாளம், தமிழ் இலக்கியத்தை பாதுகாக்கின்ற காக்கும் கருவி அதாவது புராண, இதிகாச, வரலாற்றுச் சான்றுகள் பாதுகாக்கப்படுகின்றன என்பது திண்ணமாகும். கூத்து எமது மட்டக்களப்புத் தமிழகத்தின் தனித்துவம் ஒற்றுமை, திறமை, அறிவுக்கான தளமாக அமைவதோடு மட்டுமன்றி மரவுவழி ஊடகமாக ஓங்கி நிற்கின்றது,

இனி, அண்ணாவியார் என்பவர்யார்? அவருக்கு இருக்கவேண்டிய பண்புகள், திறமைகள், ஆற்றல்கள் என்பவற்றை இப்பாடலோடிணைத்துப் பார்ப்போம் அண்ணாவி என்பவர் ஆதிமூர்த்தி, இறைவனுக்குச் சமமானவர் இவரே கூத்தின் மூலவேரான மூலமாக இருப்பவர். கூத்துக் கலையின் குரு கூத்துக் கலையின் முக்கியத்துவம் அது ஏன் ஆடப்படுகின்றது. கூத்துக்குள் அடங்கும் தொன்மையான உண்மை என்ன என்பவற்றை அறிந்து,. அதை மற்றவர்களுக்கும் தெளிவுபடுத்துபவர், அகராதியின் கருத்துப்படி அண்ணாவியார் ஓர் ஆசிரியராவார் ஓர் ஆசிரியருக்குரிய ஆளுமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

அண்ணாவியாருக்கும் இருக்க வேண்டும். அப்போது தான் தம்மாணவர்களாகிய கூத்தர்களிடம், உடல் சார் உருவாக்கங்களை, உளம் சார் உருவாக்கம், அறிவு சார் உருவாக்கங்களை ஏற்படுத்துபவராக இருக்க வேண்டும். தாளத்திற்கு ஆடுதல், அபிநயம் பிடித்தல் போன்றவற்றில் உடல்சார் உருவாக்கத்தையும், பொறுமை, (வெற்றி, தோல்விகளை ஏற்றுக்கொள்ளும்) விட்டுக் கொடுக்கின்ற மனப்பாங்கு, சகிப்புத்தன்மை, செவிமடுத்தல் என்பன போன்ற உளம்சார் உருவாக் கத்தையும், மகாபாரதம், இராமாயணம், புராணக்கதைகள், அரசவம்சக் கதைகள், வரலாற்றுக்கதைகள் என்னும் அறிவுசார் உருமாற்றங்கள். இவைகளைத் தெளிவான முறையில் சரியாக முதலில் அண்ணாவியார் அறிந்திருக்க வேண்டும். வடமோடி, தென்மோடி, காமன் சிந்துநடை, வசந்தன், மகுடி, குரவைக் கூத்துக்களையும், கரகம், கும்மி, கோலாட்டம், களிகம்பு போன்றவைகளையும் பழக்குபவர்களும், கூத்துக்களின் மத்தாளம் வாசிப்பவர், கொப்பிபார்ப்பவர், தாளம்(சல்லாரி) போடுபவரும் அண்ணாவியார் ஆவார்கள். அன்றியும் கலையினைத் தொழிலாகக் கொள்ளாது தன்னிகரற்ற சேவையாக நினைப்பவரே அண்ணாவியார்.

கூத்துப் பழக்கும் போது பாடுதல், ஆடுதல், தாளம் போடுதல், மத்தாளம் வாசித்தல், பழக்குதல், பயிற்சியளித்தல், வாரிசுக்களை உருவாக்குதல்(மத்தாளம் வாசிக்க கூத்துப்பழக்க அண்ணாவிமாராக சந்ததிகளை), கூத்துப்பிரதிகளை எழுதுதல் பொருத்தமான ஒப்பனை செய்தல், சட்டம் கொடுக்கும் போது பொருத்தமான தோற்றம், பெண் பாத்திரம், ஆட்டம், குரல்வளம் என்பவற்றை அறிந்தே தேர்வு செய்யும் ஆளுமை அண்ணாவிமார்களுக்கே உரிய ஆளுமையாகும். அன்றியும் ஓர் அண்ணாவியார் பெண்பாத்திரமேற்று ஆடியவராகவும், பல தாளக்கட்டுக்கள், ஆட்டமுறைகள், அளிக்கை முறைகள், பாடல் முறைமைகள், கூத்தர்களுக்கு இலகுவான முறையில் பழக்கு மாற்றலும் உடையவராக இருக்கவேண்டும்.

மத்தாளம் அடிக்கும் இருகரங்கள் சிவத்துள் சக்தியாகும் ஒன்றின் இயக்கத்திற்கு சக்தியவசியமாகும். அர்த்த நாரீஸ்வரர் ஆதி மூர்த்தி வலப்பாகம் சிவம் இடப்பாகம் சக்தி ஆகவே இருகரங்கள் சிவம் சக்தி மத்தளத்தில் உச்சம், தொப்பையெனு மிருபகுதிகளுண்டு

மென்மையான ஒலி மெல்லியயொருபக்கமும் வன்மையான ஒலி வல்லிசை மறுபக்கமும் எழுப்புகிறது. பண்ணான தாளம் "ததிந்தந்தா' பண் என்பது ஏழுசுரங்களுள்ள இசை என அகராதி கூறுகின்றது. மேலும் ஓசையெனவும் பொருள் கொள்வர். இதில் வரும் "ததிந்தந்தா" எனும் தாளம் கூத்தில் வரும் ஏனைய தாளக்கட்டுடன் இசைவாக்கமடைந்து செல்வாக்குச் செலுத்தும் ஒரு தாளமாகும். பரிதிவட்டம் பரமசிவன் உரித்ததோலாகும் வாரது வாசுகியாகும். மத்தளத்தின் இருபக்கத் தோல்களையும் மத்தளத்துடன் இணைப்பதுவார் ஆகும். இது பாற்கடல் கடைய கயிறாகப் பயன்படுத்திய வாசுகியெனும் பாம்பாகும். கட்டிவந்த வேட்டி புலித்தோலாடையாகும். எனவே அண்ணாவிமார்களோ, களரியாகிய தில்லையம்பலம் எனும் புனித இடத்திற்குள் நின்று கூத்துக்களை நடாத்திச் செல்லும் கொப்பியண்ணாவியோ, தாள அண்ணாவியோ, பிற்பாட்டுப்படிப்பவர்களோ எமது பாரம்பரிய உடை யான வேட்டியும், திறமுடையதீரமான சால்வையும் அணியவேண்டு மென்பதும் அப்பாடலிலே சுட்டிக்காட்டப்படுவதோடு, அந்த தூய்மை யான சிவபூமியாகிய களரிக்குள் செய்யத்தகாத செயல்களைச் செய்து கூத்துக் கலைக்கும், தமக்கும் அவமானத்தைத் தேடுகின்றனர். தகாத செயலான மது அருந்திக் கொண்டு, புகைத்தல், வெற்றிலை போட்டுத் துப்புதல் கூத்துக்களரியின் மதிப்பை மழுங்கடிக்க செய்துவிடும் மத்தளம் என்பது நந்திதேவன். சல்லாரி என்பது பொற்தாளம் கூத்து ஆட்டத்தின் முழுமை மத்தளம், தாளம் (சல்லாரி), சதங்கையொலியின் ஒத்தியைவினிலே தங்கியிருக்கின்றன. கிரீடமெனும் தலைப்பாகை கங்கை என்னும் போது தலைப்பாகை சிவனின் சடாமுடியிலிருக்கும் கங்காதேவியையும் வளர் பிறையையும் குறித்து நிற்கும்.

# ஆட்ட முறையும் தாளக் கட்டுதலும்

வடமோடிக் கூத்தில் வரவு ஆட்டத்தாளக்கட்டில் மட்டக்களப்பு மாவட்டத் தில் பெரும்பாலான பிரதேசங்களில் அரைவட்டம், எட்டுப்போடுதல், வீசானம், நாலடி ஆட்டத்தோடாரம்பமாகின்றது. ஆனால் சில பிரதேசங் களில் (அம்பாறை) வரவு ஆட்டத்தில் சில வித்தியாசங்கள் காணப்ப டுவதும், தென்மோடி ஆட்டங்களில் குத்திமிதித்தல், புரட்டிமிதித்தல், துள்ளிமிதித்தல் இருமோடிகளிலும் சண்டையாட்டங்களுக்கு பாட்டு, தரு(தென்மோடி)க்கேற்ப வித்தியாசமான ஆட்டமுறைமைகள் உண்டு. ஆனால் அதன் வேறுபாடுகளை நன்கு அறியாத அண்ணாவிமார்கள் தங்கள் தங்களுக்குத் தெரிந்த முறைகளில் பழக்கி விடுவதனால், பொதுமைத்தன்மையினை இழந்து விடுகின்றது. இதனால் கூத்துப் போட்டிகள் நடைபெறும் போது குழப்பநிலை ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கு அனைத்துப் பிரதேசங்களிலும் அண்ணாவிமார்க ளுக்கான பயிற்சிப் பட்டறைகளை நடத்துவதன் மூலம் பொதுமைப் பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். எமது பாரம்பரிய களரி ஆட்ட முறையில் கூத்தினை ஆடும் போது படச்சட்ட முறையைபுகுத்து வது அது பொருத்தமாகாது. உதாரணமாக உலநாச்சி வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் பூசகர் சிவத்திற்கு பூசை செய்யும் போது அவற்றைக் களரியின் நடுவில் வைத்து பூசையை செய்ய மற்றய கூத்தர்கள் வளைத்து ஆடவேண்டும், மார்க்கண்டேயர் வடமோடி, தென்மோடி கூத்துக்களிலும் மார்க்கண்டேயர் களரியின் நடுவில்வைத்துப் பூசை செய்ய மிருகண்டேயர், மனைவி அவர்கள் பாட்டுக்கேற்ப களரியில் ஆடவேண்டும். கூத்தாட்டம் என்பதன் படி களரியில் கூத்தர்கள் ஆடிக்கொண்டிருக்க வேண்டும். வடமோடியில் தென்மோடியாட்டமும் தென்மோடியில் வடமோடியாட்டமும், இதே போல் பாடல் முறைகளும் கலந்து வருவது காணக்கூடியதாக இருப்பதனை அண்ணாவிமார்களாகிய நீங்கள் கவனித்துத் திருத்திக் கொள்ளவேண்டும்.

வடமோடிப் பாடல்களில் (தரு) காப்பு, வெண்பா, இறைத்துதி, சபைவிருத்தம், வரவு விருத்தம், விருத்தம், கொச்சகம், முத்திரைப்

பல்லவி, தாழிசை, கலிப்பா, கந்தார்த்தம், அகவல், ஆனந்தக்களிப்பு, கும்மி, மங்களம் போன்ற பாடல்கள் அக்கூத்துக்கள் ஆக்கப்பட்ட கால அளவுக்கேற்ப ஆக்கப்படுகின்றது. அதிகமான பாடல்களில் முத்திரைப் பல்லவியின் முதற்பகுதியாகிய பல்லவியே திரும்பத் திரும்பப் பாடப் படும். தென்மோடிக் கூத்துத் தருக்கள் (பாடல்கள்) சபைக்கட்டு, காப்பு விருத்தம், சபைவிருத்தம், வரவு விருத்தம், என் சீர்விருத்தம், ஆசிரிய விருத்தம், சந்தவிருத்தம், ஆசிரியம், ஆசிரியப்பண், கொச்சகத் தரு, சந்ததம், தாழிசை, பரணி, உலா, கலிப்பா, கலித்துறை, கழில்நெடில், கல்வெட்டு, இன்னிசை, வெண்பா, தேவாரம், கவி, அகவல் ஆகியனவும் கூத்தின் கால அளவிற்கேற்ப ஆக்கப்படும். ஆனால் அதிகமான பாடல் கள் தருபாடிய பின்னரே பாடல் கூத்தரால் பாடப்பட பாடலின் பிற்பகுதி பாடப்பட்டு தருபாடப்படுவதே வழக்கமாகும். வடமோடியில் கூடியளவு முத்திரைப் பல்லவி பாட்டிற்கு விசேட ஆட்டமான முத்திரைப் பல்லவம் ஆடப்படும் இவ்வாட்டம்

தென்மோடிக்கில்லை எனினும் "ஒரேவழி'' முத்திரைப்பல்லவி தென்மோடியிலும் இருப்பதனால் இதுவே இருமோடிக்கும் காணப்படும் ஒற்றுமையாகும். முத்திரைப்பல்லவியில் மட்டும் பாடலின் முதற்பகுதி யாகிய பல்லவியையே திரும்பத்திருப்பப் படிப்பது தென்மோடியில் வழக்கமாகும். ஆனால், தென்மோடிக்குரிய ஆட்டமே(குத்திமிதித்து) இங்கு ஆடப்படும். முத்திரைப் பல்லவி அனுருத்திரனில் மூன்று பாடல்கள் உண்டு சாம்பேந்திரனில் ஒன்பதும், இந்திரன் பூங்காவனத்தில் ஏழும், அலங்காரரூபனில் இரண்டு, வாளவீமனில் பதிநான்கும் உண்டு இவ்வாறே அனைத்துத் தென்மோடிக் கூத்துக்களிலும் முத்திரைப் பல்லவித்தருக்கள் விரவிக்காணப்படுவது சிறப்பம் சமாகும். உதாரணமாக, அனுருத்திரனிலுள்ள முத்திரைப் பல்லவிப்பாடலொன்று.

தூது சொல்ல வந்ததைக் கேளும் – வானே சுரனே
தூது சொல்ல வந்ததைக் கேளும்
தூது சொல்ல வந்ததைக் கேள் துவரை நகர்க்கதிபன்
ஆதவன் மகனை நீயும் அருஞ்சிறையில் வைதத்தென்ன.
(தூது............)

என்று தொடர்ந்து பாடல்களின் இறுதியில் பல்லவியைப்பாடுவர். கூத்தப் பிரதிகளை ஆக்குவதில் அண்ணாவிமார்கள் கட்டாயம் கரிசனைகாட்ட வேண்டும். ஏனெனில் புத்தாக்கம், மீளுருவாக்கம், நவினமயமாக்கம் என்று வரும் போது, பாடசாலை மட்டக் கூத்து அரை மணித்தியாலம், பல்கலைக்கழகம், மாகாணப் கலாசார பண்பாடு திணைக்களங்கள் ஒரு மணித்தியாலக் கூத்துக்களை எதிர்பார்க்கின்றனர். இப்போட்டிக் கூத்துக்களை நீங்கள் பிரதியாக்கம் செய்யும் போது புராண இதிகாச, வரலாற்று சமகாலச் சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்டு நமது பாரம்பரிய மரவு முறைமாறாத வடமோடி, தென்மோடி கூத்துப் பிரதிகளை ஆக்கிக் கொள்ள வேண்டும். இருக்கின்ற கூத்துப் பிரதிகளிலிருந்து ஆக்கம் செய்வதாயின் குறித்தநேரத்திற்கமையச் சரியானமுறையில் சம்பவங்களைத் தொகுத்து, நெறிப்படுத்தி பிரதியாக்கம் செய்து அவ்வவ் மோடிக்குரிய அம்சங்கள் வரக்கூடியதாக நேரக்கட்டுப்பாட்டுடன் ஒத்திகைபார்த்துப் பார்த்து உரிய முறைப்படி பிரதியாக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் அண்ணாவிமார்கள் தன்நிலை மறந்து இறைவனால் வழங்கப்பட்ட கலைஞானத்தை உதாசீனம் செய்யும் நிலை தொடராது. தான்யார், தன்கடமைகள் என்ன வென்பது புரிந்து, தமது அகந்தை, அறியாமைகளைந்து மற்றைய அண்ணாவிமார்களிடமும் மனம் திறந்து தெரியாதவற்றை, சரியானவற்றை அறிந்து செயற்பட்டால், எதிர்காலத்தில் தமிழ்ர் கலைவடிவாகிய கூத்துக்கலையினை மேன்மையுற வைப்பதோடு எதிர்கால இளம் தலைமுறையினரிடம் கையளிக்கவும் முடியும். கல்விஞானம் கலைஞானம் இரண்டும் ஒரு குருவிடமிருந்தே பெறமுடியும் கலைஞானமான கூத்தினை ஆதிமூர்த்தியாகிய அண்ணாவிமார்களே அளிக்கமுடியும்.

**ஆரையூர் அருள்**
**அண்ணாவியார்**

**கூத்தியலில் பயன்படுத்திய ஆங்கில மொழிச் சொற்கள்**

டொக்டர்
லோன்
ஒப்பரேசன்
லொறி
ரோட்
சூ ஆர் யூ



## நூலாசிரியர் பற்றி...

தமிழர்களது பண்பாடும், பாரம்பரியங்களும் ஒரு சமூகத்தினையே இணைக்கின்ற தாக அமைந்துள்ளன. தமிழர்கள் உண்ட உணவுகளிலிருந்து ஆடிய கலைகள் வரை உடலாரோக்கியத்தினைப் பேணுகின்றதாகவே அமைந்துள்ளன. இவ்வாறான பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் பேணி வளர்த்தெடுப்பவர்களில் கிராமப்புற மக்களே முதலிடத்தில் உள்ளனர். கிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத் தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும் கூட, கூத்து உட்பட பாரம்பரிய கலைகளை கிராமப்புற தமிழ் மக்களே இன்றும் வளர்த்துக் கொண்டு வருகின்றனர்.

பல்கலைக்கழகங்கள் சென்றதில்லை, பட்டங்கள் பெற்றதில்லை. ஆனால் கூத்துப் பிரதிகளை சிறந்த சொல் நயங்களுடன் எழுதும் புலவர்கள் கிராமப் புறங்களிலே தோன்றி உள்ளனர். அத்துடன் இசையுடன் கூடி மத்தளத்தினை வாசிக்க கூடிய அண்ணாவிமார்கள் உருவாகி உள்ளனர். கூத்தின் ஊடாக சமூகத் தினையே முகாமைத்துவம் செய்யக் கூடிய முகாமைத்துவாளர்கள் உருவாகியிருக் கின்றனர். இதே போன்ற பலதிறமைமிக்க ஆளுமையாளர்களை பாரம்பரிய கலையானது கிராமங்களிலே உருவாக்கியிருக்கின்றது. இவ்வாறான ஆளுமையாளர் களின் சிரசினுள்ளே ஒரு நூலகமே அமைந்திருக்கின்றது. இந்த நூலகத்தினைப் பயன்படுத்துபவன் ஏதோ ஒருவகையில் வாழ்க்கையில் வெற்றி காண்கின்றான்.

அந்தவகையில், கிராமத்தாயிடம் பிறந்து, வளர்ந்து கூத்துக்கலையை சிறுபராயத்திலிருந்து பார்த்து, அதிலே பாத்திரமேற்று நடித்து, ஏட்டு, மத்தள அண்ணாவியாராகவும் செயற்பட்டு, பல கூத்துப் பிரதிகளையும் எழுதி, பிரதேசத்தினாலும், கிழக்கு மாகாணத்தினாலும் 'இளம் கலைஞர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்ட, கலைமாணி பட்டதாரி மகேந்திரன் கேதீஸ்வரன் "கூத்தியல்" என்ற நூலினை வெளியீடுகின்றமை கண்டு அகமகிழ்கின்றேன். சமூக சேவையோடு, இறைபக்தியிலும் நாட்டம் கொண்ட, இவரின் கவித்துவ ஆற்றலினால் பஜனை பாமாலையென்ற புத்தகமும் கடந்த வருடத்தில் வெளியிடப்பட்டிருந்தமை சிறப்பானதொன்று.

சமூகத்தோடு இணைந்து, தானும், தான் சார்ந்த பாரம்பரிய கலைகளை வளர்த்தெடுப்பதற்காகவும் சவால்மிக்க நவீனத்துவ உலகில் களத்திலே நின்று கலையை வளர்த்து, எதிர்கால சமுதாயத்திற்கு பாரம்பரிய வழிகாட்டலுக்குரிய நூலினை வழங்கும் அளப்பரிய சேவைக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**– வ. துசாந்தன் –**

அக்ஷயனி அச்சகம், கொக்கட்டிச்சோலை.